

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 மேழும் நல்லோரை சித்திரைத் திங்கள் 29ம் நாள் (12-05-2025 திங்கட்கிழமை) வெளியீடு +94 21 222 9722




## இலங்கை நல்லை ஆதீன இரண்டாவது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் சிவனுடன் இரண்டறக்கலந்தார்

# வடமாகாண சபையில் புதிதாக அமையப்பெற்ற சொக்கநாதர் திருக்கோயில்











நிதி அன்பளிப்பு - சிவத்திரு. சண்முகநாதன் சண்முகராசா, திருமதி. பிரியதர்ஷினி சண்முகராசா மற்றும் பிள்ளைகள் ஷகின், பிரஜித் (காரைநகர் - இலண்டன்)

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம்.     www.thennadu.org

**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்** - தலைமை ஆசிரியர்,
BSc Eng (Hons) CPEng (Aust) FIEAust MA (Philosophy)
+6149949 3300, thennavan@thennadu.org



# கோயில்கள் சமூக நிறுவனங்களாகவும் தொழிற்படவேண்டும்

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)**

இலங்கையிலும் சரி, புலம்பெயர் நாடுகளிலும் சரி சைவக் கோயில்கள் பூசைகள் வழிபாடுகளுடன் மட்டும் நிற்காது சமூக செயற்பாடுகளில் கூடிய பங்கு ஆற்ற வேண்டும். சில கோயில்கள் ஏற்கனவே பெரும்சேவை களைச் செய்துவருகின்ற போதிலும், பல கோயில்கள் இவ்வாறு செய்வதில்லை. கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கவேண்டாம் என்பது வெறுமனே வழிபாட்டினை மட்டும் வைத்து வந்த வழக்கு அல்ல. கோயில் என்பது ஒரு ஊரின் தலைமைச் செயலகம் என்றே கூறலாம்.

இது இன்று நேற்று மட்டுமல்ல, காலம் காலமாக இருந்து வருகின்ற விடயமாகும். இராசஇராசன் காலத்தில் தஞ்சை பெருவுடையார் கோயிலின் சமூக வகிபாகத்தினை எடுத்துப் பார்த்தால் கோயிலின் முக்கியத்துவம் புரியும். காலமாற்றத்துடன் சமூகத்திற்கான தேவைகள் மாறிக் கொண்டு போகும், அதற்கு ஏற்றாற்போல் நாங்களும் மக்களின் தேவைகளை அறிந்து அவர்களுக்கு எம்மாலான உதவிகளை கோயில்களின் ஊடாகச் செய்யவேண்டும்.

இப்படியான சேவைகளை கோயில்கள் செய்ய முடியாமல் போவதற்கான சில காரணங்களைப் பார்த் தால் நிர்வாகத்தின் சிந்தனை ஆற்றல், சமூகப்பொறுப்பு பற்றிய அக்கறை இன்மை, அதிகரித்துச் செல்லும் பூசை வழிபாடுகள், வருமானமே முதன்மையான சிந்தனை, கோயில் நிர்வாகத்தின் அதிகாரப்போட்டிகளும் உட்பிரிவு களும் மற்றும் நிதி நிலைமைகள் என்று வரிசைப்படுத்த லாம். இந்த வட்டத்தினை உடைத்து வெளியில் வருவ தற்கு பத்தர்கள் மற்றும் கோயில் பொதுக்குழு அங்கத்த வர்களின் பங்குகள் இன்றியமையாதன.

கோயில்களின் இவ்வாறான இடைவெளி களைப் பயன்படுத்தி பல மதமாற்றுச் சமயங்கள் மற்றும் நிறுவனங்கள் மற்றவர்களை மாற்றி தம்வசமாக்கிக் கொள்கின்றன. சேவை என்ற போர்வைக்குள் மதமாற் றுப் பூதங்கள் மறைந்து நிற்கின்றன என்பதை யாவரும் அறிவர். ஆனால் எங்களால் இதை வெல்லமுடிவ தில்லை.

இனி வரும் காலங்களில் கோயில்கள் மக்களை அறிந்து, அவர்களின் தேவைகளை அறிந்து அவற்றிற்கு தம்மால் இயலுமான உதவிகளைச் செய்ய முன்வரவேண்டும். இது நிச்சயமாக பொருளாதாரத் தேவையாக மட்டும் இருந்துவிடாது.

மேலும் தமிழ்நாட்டில் உள்ளதுபோல் இலங்கையில் அல்லது புலம்பெயர் நாடுகளில் ஆதீனங்கள் இல்லை. ஆதீனங்களின் முதன்மையான பணிகளில் ஒன்றான திருமுறைகள் மற்றும் சித்தாந்த சாந்திரங்களை மக்களுக்கு கொண்டுபோய்ச் சேர்க்கும் திருப்பணியை, கோயில்கள் முன்னெடுக்கவேண்டும்.

மீண்டும் குறிப்பிட விரும்புவது, கோயில்கள் எந்த நோக்கங்களிற்காக தொடங்கப்பட்டனவோ அந்த நோக் கங்களிற்காக இயங்குகின்றதா என்பதை பொதுச்சபை உறுப்பினர்கள் அடிக்கடி உறுதி செய்யவேண்டும். அத்துடன் சமய மற்றும் சமூக செயற்பாடுகளை முன்னெடுக்கும் பாதையில் நிர்வாகக் குழுக்கள் தெரியப்படவேண்டும். வழிபாடுகள் அவசியம் ஆனால் சமூக சிந்தனை இல்லாத சமய நிறுவனங்கள் மக்களின் மனங்களில் இடம்பிடிக்காது. இந்தச் சந்தர்ப்பத்தில் எமது சமயம் நலிவுற்று பின்செல்லும் வாய்ப்புகளே அதிகம். இதனை தடுக்க நாம் எல்லோரும் சிந்தித்துச் செயலாற்றவேண்டும்.


# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org



# தென்னாடு நிறைமதி அறிக்கை

(12-04-2025) – யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் கந்தசுவாமி திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவில் கலந்து கொள்ள தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்திருந்த செங்கோல் ஆதீனம் குருமுதல்வர் அவர்களுடன் தருமை ஆதீன திருக்கேதீச்சரத் தம்பிரான் தவத்திரு. மீனாட்சி சுந்தரம் சுவாமிகளும் இணைந்து தென்னாட்டிற்கு வருகை தந்து வழிபாடு ஆற்றியிருந்தனர்.

(12-04-2025) – மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 மீனம் நல்லோரை பங்குனித் திங்கள் 29ம் நாள் நிறைமதி அன்று (12-04-2025 சனிக்கிழமை) ஐம்பத்து ஆறாவது தென்னாடு திங்கள் செய்தியிதழ் வெளியீடு நிறைமதி வழிபாட்டுடன் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் தருமை ஆதீன திருக்கேதீச்சரத் தம்பிரான் தவத்திரு. மீனாட்சி சுந்தரம் சுவாமிகள், வடமாகாண ஆளுநர் சிவத்திரு. நாகலிங்கம் வேதநாயகன் ஐயா அவர்கள், வடமாகாண பிரதம செயலர் சிவத்திரு. இலட்சுமணன் இளங்கோவன் ஐயா அவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சிவத்திரு. சிவக்கொழுந்து சிறிசற்குணராசா ஐயா அவர்கள், சிட்னி பொறியியலாளர் சிவத்திரு. நரேந்திரநாதன் கதிர்காமநாதன் ஐயா அவர்கள், அகில இலங்கை சைவ மகா சபை தலைவர் மருத்துவர் பரா நந்தகுமார் ஐயா அவர்கள் மற்றும் அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இந்நிகழ்வில் தருமை ஆதீன திருக்கேதீச்சரத் தம்பிரான் தவத்திரு. மீனாட்சி சுந்தரம் சுவாமிகள் துணைவேந்தர் சிவத்திரு. சிவக்கொழுந்து சிறிசற்குணராசா ஐயா அவர்களுக்கு முதல் இதழினை வழங்கி, தென்னாட்டின் ஐம்பத்து ஆறாவது திங்கள் இதழை வெளியிட்டு வைத்திருந்தார்.

(14-04-2025) – உலக நிறைவு வருடப்பிறப்பு சிறப்புப் பூசை வழிபாடுகள் அதிகாலை 2.29 மணியளவில் இடம்பெற்றன. (22-04-2025) – அமரர். குணரத்தினம் சுகந்தீபன் அவர்களின் ஆண்டுத்திதி வழிபாடுகள் இடம்பெற்றன. (23-04-2025) – அப்பர் சுவாமிகள் குருபூசை வழிபாடுகள் இடம்பெற்றன. (25-04-2025) – சித்திரைத் திங்கள் தேய்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

(04,05-05-2025) – வட மாகாண சபையில் புதிதாக அமையப்பெற்ற அருள்மிகு சொக்கநாதர் திருக்கோயில் கடவுள் மங்கல நன்னீராட்டுப் பெருவிழா வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. தென்னாடு சைவ மாணவர் சபையின் ஏற்பாட்டில், எம்பெருமானை சொக்கநாதர் என்ற திருப் பெயரில் திரு நிலைப்படுத்தல் செய்யப்பட்டிருந்தது. இவ்வழிபாடுகளை சித்தாந்தப் புலவர், செந்தமிழ் வேள்வித் தொண்டர், கயிலைமணி சிவமுருகு இளவேனில் ஐயா அவர்கள் (மாசிலாதியாகேசர் கோயில், நாகரசம்பட்டி, கிருஷ்ணகிரி, தமிழ்நாடு) ஆற்றி வைத்திருந்தார்.

(05-05-2025) – தென்னாட்டில் சிறப்புத் திருமஞ்சன வழிபாடுகள் இடம்பெற்றன. இவ்வழிபாடுகளை சித்தாந்தப் புலவர், செந்தமிழ் வேள்வித் தொண்டர், கயிலைமணி சிவமுருகு இளவேனில் ஐயா அவர்கள் (மாசிலாதியாகேசர் கோயில், நாகரசம்பட்டி, கிருஷ்ணகிரி, தமிழ்நாடு) ஆற்றி வைத்திருந்தார். (09-05-2025) – அமரர். சிவநேசரத்தினம் குணரத்தினம் அவர்களின் ஆண்டுத்திதி வழிபாடுகள் இடம்பெற்றன. (10-05-2025) – சித்திரைத் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

**திருச்சிற்றம்பலம்**

# நல்லை ஆதீன குரு முதல்வரின் நினைவு வழிபாடு



நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் இரண்டாவது குருமகா சந்நிதானமாக விளங்கிய சீர்வளர்சீர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களின் நினைவு வழிபாடும், அவருடைய திருச்சாம்பல் (அஸ்தி) நிலைப்படுத்தல் நிகழ்வும், கடந்த 09-05-2025 வெள்ளிக் கிழமை அன்று பத்தி உணர்வுடன் நடைபெறப்பட்டது.

நல்லை ஆதீன மண்டபத்தில் காலை 9 மணியளவில் தொடங்கிய நிகழ்வானது, கலாநிதி ஆறு திருமுருகன் ஐயா அவர்களின் தலைமையில் மிகுந்த பத்தியும் மரியாதையும் நிறைந்த முறையில் நடைபெறப்பட்டது. இந்நிகழ்வில் தருமையாதீன திருக்கேச்சர மடத் தம்பிரான் தவத்திரு. மீனாட்சி சுந்தர தம்பிரான் சுவாமிகள், தவத்திரு. வேலன் சுவாமிகள், தவத்திரு. வேதவித்தியாசாகர் சுவாமிகள் என சைவ ஆதீன முதல்வர்களும், சைவ அமைப்புக்களின் தலை வர்கள் மற்றும் அடியார்கள் பலரும் கலந்து கொண்டு, சுவாமி களின் நினைவில் தங்கள் மரியாதையையும் பத்தியையும் செலுத்தினர்.

வழிபாட்டைத் தொடர்ந்து அடியார்களுக்கு அமுது செய்வித்தலும் இடம்பெற்றிருந்தது. இந்த நிகழ்வு, நல்லை ஆதீனத்தின் ஆன்மிக மரபையும், குருபத்தியையும், சைவ சமயத்தின் ஒற்றுமையையும் எடுத்துரைத்த ஒரு சிறப்புப் பத்தி விழாவாக அமைந்தது.

**திருச்சிற்றம்பலம்**

---

# சிங்கப்பூர் செண்பக விநாயகர் கோயில் ஆவணப்படம் வெளியீடு



சிங்கப்பூர் அருள்மிகு செண்பக விநாயகர் கோயிலின் மரபை ஆவணப்படுத்தும் திரைப்படத்தைச் சிங்கப்பூர் இலங்கைத் தமிழர் சங்கம் வெளியிட்டுள்ளது. சிங்கப்பூரில் பத்தொன்பதாம் நூற்றாண்டின்போது கட்டப்பட்ட அந்த கோயிலைப் பற்றிய ஆவணப்படம், சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் கலாசார நிலையத்தில் கடந்த ஏப்ரல் 27 (ஞாயிற்றுக்கிழமை) திரையிடப்பட்டது. ‘சிங்கப்பூரில் புனிதப் பொது வெளி’ (A Sacred Space in Singapore) என்ற தலைப்பைக் கொண்டு அந்த ஆவணப் படம் தயாரிக் கப்பட்டது.

கிட்டத்தட்ட 600 பேர் வருகை தந்திருந்த இந்நிகழ்ச்சி யில் சிங்கப்பூர் குடியரசுத் தலைவரான சிவத்திரு. தர்மன் சண்முகரத்தினம் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் 2027ல் முதலாம் காலாண் டில் நடைபெறவுள்ள அருள்மிகு செண்பக விநாயகர் கோயி லின் திருக்குடமுழுக்கிற்காக நிதி திரட்டல் பணிகளும் இடம்பெற்றிருந்தது. திருக்கோயிலின் கலைப்பள்ளி மாண வர்களின் வில்லுப்பாட்டு நிகழ்வொன்றும் திருக்கோயில் மரபை மையப்படுத்தி, இலங்கைத் தமிழர்கள் சிங்கப்பூரில் செய்ய இயன்ற சாதனைகளுக்காகக் கடவுளுக்கு நன்றி கூறும் விதமாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. அத்துடன் ‘வேர்களும் பயணப் பாதைகளும்: சிங்கப்பூரின் இலங்கைத் தமிழர்கள்” என்ற பதாகை வடிவிலான கண்காட்சிக் கூடமும் நிகழ்ச்சி வளாகத்தில் இடம் பெற்றது.

**திருச்சிற்றம்பலம்**

# ஆறாவது அனைத்துலக சைவ சித்தாந்த மாநாடு




திருக்கயிலாயப் பரம்பரை தருமை ஆதீனம் அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்தின் தமிழ்ப்பேராயம் இணைந்து நடத்திய ஆறாவது அனைத்துலக சைவ சித்தாந்த மாநாடு, சென்னை எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில், கடந்த மே 3,4,5 என மூன்று நாட்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இம்மாநாட்டில், சைவ மரபை ஆராய்ந்து அறிவின் வழியாக உலகளாவிய ஒளியாக மாற்ற வேண்டும் என்ற நோக்கில், இந்தியா, மலேசியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து ஆன்மிக, கல்வித் துறையைச் சேர்ந்தவர்களும், பல்வேறு புலம்பெயர்ந்த தமிழர்களும் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் நிறைவு நாளில், தருமையாதீனத்தின் 27 ஆவது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், மகாராஷ்டிரா மாநில ஆளுநர் சி.பி. இராதாகிருஷ்ணன், மலேசியாவைச் சேர்ந்த டான் ஸ்ரீ டத்தோ ஆர். நடராஜா, பேச்சாளர் பாரதி பாஸ்கர், எஸ்.ஆர்.எம். இணைவேந்தர் ரவி பச்சமுத்து, தமிழ்ப் பேராயத் தலைவர் கரு. நாகராசன் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் பங்கேற்று உரையாற்றினர்.

கரு. நாகராசன் அவர்கள், கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில் செந்தமிழில் வழிபாடுகள் ஆற்றக்கூடிய ஆயிரக்கணக்கான அர்ச்சகர்கள் உருவாக்கப்பட்டிருப்பதை ஒரு பெருமையான முன்னேற்றமாகக் குறிப்பிட்டார். இது தமிழில் சமய வழிபாடுகள் நிலைபெற வழிவகுத்துள்ளதாகவும், இளைஞர்களிடம் பத்தி, ஒழுக்கம், கருணை ஆகியவற்றை வளர்த்தால் சமுதாய மாற்றம் சாத்தியமாகும் என்றும் கூறினார்.

பாரதி பாஸ்கர் அவர்கள், **“சைவ சித்தாந்தம் என்பது நூல்களில் மட்டும் நிலைத்து இருப்பதற்கான ஞானம் அல்ல; நெஞ்சில் நிலைத்து இருக்க வேண்டிய ஒழுக்க நெறி”** எனக் கூறி, அனைவரிடமும் ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டினார்.

ரவி பச்சமுத்து அவர்கள், இம்மாநாடு ஆன்மிக அறிவைப் பகிர்வதற்கான தளமாக செயல்பட்டு, சைவ சித்தாந்தத்தின் உண்மைத் தத்துவங்களை உலகம் முழுவதும் பரப்பும் நெறியாக விளங்கும் என்று குறிப்பிட்டார்.

சீர்வளர்சீர் கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள், சைவ சித்தாந்தம் ஆழமான ஆன்மீகக் கருத்துகளை உள்ளிழுக்கும் தத்துவமாக விளங்குவதோடு, இறைவனுடன் ஆன்மாவின் ஒற்றுமையை அடைய வழிகாட்டும் ஒளியாகவும் விளங்கும் என்றார்.

சி.பி. இராதாகிருஷ்ணன் அவர்கள், பண்டைய பாரம்பரிய அறிவைக் கடைபிடிப்பதே நவீனமாதல் எனக் கூறி, கடந்த காலத்தின் சிந்தனைகள் எதிர்காலத்தை வடிவமைக்கும் கண்ணாடி எனக் கூறினார்.

இம்மாநாடு, சைவ சித்தாந்தத்தை நூறாண்டுகளும் நிலைத்து வளர்க்கும் பெரும் தளமாக விளங்கி, ஆன்மிகத் தொன்மையை இன்றைய தலைமுறைக்கு உரிய விதத்தில் எடுத்துச் செல்லும் பணியை சிறப்பாகச் செய்துள்ளது.

**திருச்சிற்றம்பலம்**

# சிவனுடன் இரண்டறக்கலந்தார் நல்லை ஆதீனம் விழுந்துவிடக் கூடாத ஈழத்துச் சைவ மரபு



யாழ்ப்பாண சைவ மரபின் அடையாளமாகவும், தலைமைப் பீடமாகவும் திகழ்வதே நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனம். இவ்வாதீனத்தின் உருவாக்கம், 20ஆம் நூற்றாண்டின் முத்தான சைவப் பரம்பரையை மீட்டெடுத்த வெற்றிப் படியாகும்.

இவ்வாதீனத்தின் முதலாவது குருமகாசந்நிதானமாகத் திகழ்ந்தவர், தவத்திரு. சிவசுப்பிரமணியம் ஐயர் (மணி ஐயர்) அவர்கள். 1918ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் பிறந்த இவர், சிறப்பான சைவப் பேச்சாளராக, கதாப்பிரசங்கத் திறமையால் பொதுமக்களிடையே பக்தி உணர்வை தூண்டியவர். மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் 291 வது குருமகாசந்நிதானம், தவத்திரு. சீர்வளர்சீர் சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், இவரை 1966இல் துறவியாக்கி காவி உடையுடன், சிவப்பணிக்கு அர்ப்பணித்ததுதான் நல்லை ஆதீனத்தின் தொடக்கமாக அமைகிறது.

இவர் சைவ மரபுப்பாதையில் அசைக்க முடியாத நிலைத் தன்மையுடன் நின்றதால்தான், இன்று ஈழத்து சைவ மரபுகள் உயிரோடு இருக்கின்றன, இயங்குகின்றன. அந்த வகையில் அவர் வழிவந்தவரே, நல்லை ஆதீனத்தின் இரண்டாம் குருமகாசந்நிதானமாக விளங்கிய தவத்திரு. சீர்வளர்சீர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள். இவர் கடந்த 44 ஆண்டுகளாக ஆதீனத் தலைமையில் சைவ சமயத்தை உயர்த்திய பணியில் முழுமையாக அர்ப்பணித்திருந்தார். சாந்தம், சமத்துவம், அறவழி போன்ற உயரிய பண்புகளின் திருவடிவமாக விளங்கிய இவர், எந்த வேறுபாடும் இல்லாமல், அனைத்து மதத் தலைவர்களுடனும் ஈடுபாட்டுடன் நட்புறவுகளை பேணியவர்.

பரந்த பத்திச் சிந்தனையும், அர்ப்பணிப்புமிக்க செயல் வழியும் கொண்ட இவரால், நல்லை ஆதீனம் உலகளாவிய ஒரு சைவத் தலைமையெனக் கொண்டு செல்லப்பட்டது. கொழும்பில் பாப்பரசரை நேரில் சந்தித்து பொன்னாடை வழங்கிய நிகழ்வும், தமிழக அரசியல் தலைவர்கள் மற்றும் இலங்கைத் தூதர்களிடம் தமிழரின் பிரச்சனைகளை நேரடியாக எடுத்துரைத்ததுமாக, சமயத் தலைமைக்கு சேவையையும் சமூக நீதிக்கும் இடைநடுவாகப் பணியாற்றியவர்.

முன்னோடி வட்டத்தின் ஆன்மீகக் கொள்கைகளை மீட்டெடுத்து, சமயப் பணிகளில் பங்களித்த இரண்டாம் குருமகாசந்நிதானம் அவர்கள், இலங்கை மட்டுமன்றி, தமிழ் நாட்டிலும் சைவ விழாக்கள், நூல் வெளியீடுகள், மாணவர் விளக்க வகுப்புகள் போன்ற பணிகளில் ஈடுபட்டவர். இவ்வாறு உலகெங்கும் சைவத்தை கொண்டு சென்ற நல்லை ஆதீன இரண்டாவது குருமகாசந்நிதானம் அவர்கள் கடந்த 01-05-2025 அன்று இறையடி சேர்ந்துள்ளார். இது சைவசமயத்திக்கு பேரிழப்பாகும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, மறைந்துள்ள பெருமகனாரின் திருவடிகளை வணங்கி, அவரின் உயிர் எம்பெருமான் திருவடிகளைப் பற்றி நிலைபெற்றிட வேண்டிடுவதொடு, ஈழத்து சைவ மரபின் தலைமைப்பீடமாக விளங்கும் நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீன குருபீடம், வரலாற்றுப் பொறுப்புடன் தொடர்ந்து வழிநடத்தப்பட வேண்டியது இன்றியமையாததாகும். எனவே, இத்தகைய மெய்யான சைவக் குருபீடத்தைக் கனிந்த ஆன்மீகத் தகுதியும், மரபு மீதான பண்புணர்வும் கொண்டவரால் வழிநடத்தப்படுவ



தற்காக, எல்லாம் வல்ல அருள்மிகு மனோன்மணி அம்மன் உடனுறை ஐம்பூதநாதப் பெருமானிடம் பணிவுடன் விண்ணப்பம் செய்கிறோம்.

**திருச்சிற்றம்பலம்**

# வடமாகாண சபையில் புதிதாக அமையப்பெற்ற சொக்கநாதர் திருக்கோயில்



தொடர்ந்து சித்திரைத் திங்கள் 21ஆம் நாள் (04-05-2025) ஞாயிற்றுக்கிழமையன்று, சொக்கநாதர் பெருமானுக்கான மங்கல நன்னீராட்டு பெருவிழா தெய்வத்தமிழில் நடைபெற்று, ஆன்மீக ஒளியைப் பரப்பிய நிகழ்வாகப் புகழ் பெற்றது. காலை 8.56 முதல் 10.26 மணி வரை விடைவான்வேளையில் நடைபெற்ற நன்னீராட்டு, திருமுறைப் பாடல்களின் மத்தியில் அருளால் நிரம்பி வழிந்தது. முதல் நாள் மாலை (மே 3) திருவிளக்கு வழிபாடு, வேள்விச் சாலை எழுச்சி, திருமகள் வழிபாடு, மற்றும் முதல்கால வேள்வி என்பன இடம்பெற்று சிவலிங்கத் திருமேனி திருநிலைப்படுத்தல் வழிபாடுகள் நடைபெற்றன. அடுத்த நாளில் திருப்பள்ளியெழுச்சியுடன் தொடங்கி, இரண்டாம் கால வேள்வி, திருக்குடம் ஊர்வலம், திருக்குட நன்னீராட்டு, அருளுரை, பெருந் திருமஞ்சனம், அருளாரமுதம் வழங்கல் என வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளன.

இப்பெரும் கைங்கரியம் சிறப்புடன் நடைபெற, சிவத்திரு. சண்முகநாதன் சண்முகராசா, திருமதி. பிரியதர்ஷினி சண்முகராசா, அவர்களின் பிள்ளைகள் ஷகின், ப்ரஜித் (காரைநகர் - இலண்டன்) ஆகியோர் நன்கொடையளித்து திருப்பணிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். மேலும், விழாவில் சித்தாந்தப் புலவர், கயிலைமணி சிவமுருகு இளவேனில் ஐயா (மாசிலாதியா கேசர் கோயில், கிருஷ்ணகிரி, தமிழ்நாடு) தலைமையில், செந்தமிழ் வழிபாடுகள் சிறப்பாக நடத்தப்பட்டன.

சைவத்தமிழர் மரபு அடையாளங்களுள் திருக்கோயில்கள் முக்கியமானதாக விளங்குகின்றது. சைவ வழிபாட்டின் தொடர்ச்சியைப் பேணும் பண்பாட்டுப் பணியில் மேலும் ஒரு புதிய மைல்கல்லாக, யாழ்ப்பாணம் **“வடமாகாண சபை வளாகத்தில் அருள்மிகு சொக்கநாதர் திருக்கோயில்”** எழுந்தருளியுள்ளது. இந்தக் கோயிலில் சிவபெருமான் **“சொக்கநாதர்”** என்ற திருப்பெயரால் நிலைபெற்றிருக்கிறார்.

திருக்கோயில் அமைப்பது என்பது வெறும் கட்டட அமைப்பு மட்டுமல்ல் பண்டைக் கால சைவ மரபுகளை இன்றைய தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் உயரிய பணியாகும். அந்த வகையில் இந்த சிவப்பணி தென்னாடு சைவ மாணவர் சபையினால் 17-04-2025 அன்று விண்ணப்பம் வைக்கப்பட்டிருந்தது. அதன் விளைவாக, வடமாகாண பிரதம செயலாளர் சிவத்திரு. இலட்சுமணன் இளங்கோவன் ஐயா அவர்களின் இணங்களுடன், 18-04-2025 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு திருக்கோயில் அமைப்பு பணிகள் ஆரம்பமாகியிருந்தது.

வடமாகாண சபையில் உருவான சொக்கநாதர் திருக்கோயில் என்பது வெறுமனே ஒரு கட்டடத் திட்டமாக அல்லாமல், மெய்யான ஆன்மீக வழிபாட்டுக் கூடம் என்ற அடையாளத்தில் பார்க்கப்பட வேண்டும். இது சைவத்தின் தொன்மையையும் , தமிழரின் வழிபாட்டு மரபுகளையும் மீட்டெடுக்கும் மையமாகவும், அடுத்த தலைமுறைக்கான ஆன்மீகப் பழக்கங்களை உயிர்ப்பிக்கும் இடமாகவும் தொடர்ந்து செயற்பட சொக்கநாதர் பெருமான் திருவருள் புரிவாராக.

**திருச்சிற்றம்பலம்**

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர். மருத்துவர் ஈசான பிரதாபன் தேசிகர்

**சிறப்பு நூல்களில் பரம் அபரம் உண்டா?**

உண்டு சிவாகமங்களே சிறப்பு நூல்கள் எனப்படும்.

சிவாகமங்களுக்கிடையேயும் பரம் அபரம் என்ற வேறுபாடுகள் உண்டு.

“பவுட்கரம் மிருகேந்திரம் மதங்கம் முதலிய சிவாகமங்கள் பெத்தத்தில் நின்ற நிலைபற்றி இலக்கணம் கூறுதலின் அவை பொது எனவும், சர்வஞ்ஞானோத்தரம் முதலிய சிவ ஆகமங்கள் முத்தியில் நின்ற நிலைபற்றி இலக்கணம் கூறுதலின் அவை உண்மை எனவும் கூறப்படும் ஆதலின், பவுட்கரம் முதலியவற்றின் பொருளுக்கு ஏற்பச் சர்வஞ் ஞானோத்தரம் முதலியவற்றிற்குப் பொருள் கொள்ளாது சர்வஞ் ஞானோத்தரம் முதலியவற்றின் பொருளுக்கு ஏற்பப் பவுட்கரம் முதலியவற்றிற்குப் பொருள் கொள்வர் திருவருள் கிடைத்த நுண் அறிவினோர் என்று உணர்க. அன்றியும் பவுட்கரம் முதலிய சிவ ஆகமங்கள் முனிவர் முதலாயினோர்க்கு அருளிச் செய்தன. சர்வஞ் ஞானோத்தரம் முதலிய சிவ ஆகமங்கள் கந்தன் கணபதி முதலாயினோர்க்கு அருளிச் செய்தன. கந்தன் முதலாயினோரை நோக்க முனிவர் முதலாயினோர் பரிபாகத்தில் தாழ்ந்தவர் ஆதலின், அவர்க்கு அருளிச் செய்த பவுட்கரம் முதலியவற்றிற்கு ஏற்பக், கந்தன் முதலியோர்க்கு அருளிச் செய்த சர்வஞ் ஞானோத்தரம் முதலியவற்றுக்குப் பொருள் கோடல் பொருந்தாமையும், முனிவர் முதலாயினோரை நோக்கக் கந்தன் முதலாயினோர் பரிபாகத்தின் முதிர்ந்தவர் ஆதலின், அவர்க்கு நுட்பப் பொருளை உள்ளவாறு அருளிச் செய்த சர்வஞ் ஞானோத்தரம் முதலியவற்றின் பொருளுக்கு ஏற்ப, முனிவர் முதலாயினோர்க்கு அருளிச்செய்த பவுட்கரம் முதலியவற்றிற்குப் பொருள் கோடல் பொருத்தம் உடைமையும் தெற்றென உணர்ந்து கொள்க.” என்று சிவஞானபோத சிறப்புப்பாயிர மாபாடிய உரையில் எழுதியுணர்த்தியதோடு, சிவஞானபோத ஆறாம் சூத்திர மாபாடிய உரையிலும் இவ்வுண்மைகளை விரித்து விளக்கி, சிவஞானமுனிவர் சிவாகமங்களுக்கிடையே மென்மை வன்மையை நிலைநாட்டுகின்றார். அஃதாவது, சிவாகமங்களுக்கு இடையே கொள்ளப்படும் பொது(அபரம்), சிறப்பு(பரம்) நிலைகளை உணர்த்துகின்றார்.

மேலும், சிவாகமங்கள் சிவபேத ஆகமங்கள் என்றும் உருத்திரபேத ஆகமங்கள் என்றும் இருவகைப்படும். இதில், சிவபேத ஆகமங்களாலேயே உருத்திரபேத ஆகமங்களுக்குப் பொருள்கொள்ளப்படும். ஏனெனில், சிவாகமங்களில் சிவபேத ஆகமங்கள் பரம் என்றும் உருத்திரபேத ஆகமங்கள் அபரம் என்றும் கூறப்படும்.

“புருஷ வாக்கியங்களாலே இருஷி வாக்கியமும், இருஷிகளாலே தெய்வ வாக்கியமும், தேவராலே பிரம வாக்கியமும், பிரமாவாலே விஷ்ணு வாக்கியமும், விஷ்ணுவினாலே உருத்திர வாக்கியமும், உருத்திரனாலே சிவவாக்கியமும், வாதிக்கப்படுவதில்லை. ஏனென்றால், ஒன்றினொன்று மேன்மேலும் சிறந்தனவாம் மேல் உள்ளனவற்றால் கீழுள்ளவைகளே வாதிக்கப்படல் வேண்டும்..” என்று பௌட்கர ஆகம வசனத்தைப் பெரியபுராண சூசன தில்லைவாழ் அந்தணர் புராணத்தில் சைவாகமவுணர்ச்சியில் நாவலர்பெருமான் குறிப்பிட்டிருப்பது கொண்டு, உருத்திர வாக்கிலும் சிவ வாக்கு மேலானது என்பதனை நன்றே தெளியலாம்.

மேலும்,ஒவ்வொரு சிவாகமங்களும் சரியாபாதம் (சரியைக் காண்டம்), கிரியாபாதம் (கிரியைக் காண்டம்), யோகபாதம் (யோகக்காண்டம்), ஞானபாதம் (ஞான காண்டம்) என்று நான்கு பிரிவுகளை உடையதாகக் கொள்ளப்படும்.

சரியாபாதம் ஸ்ரீ, சமயாசாரங்களைக் கூறும்.

கிரியாபாதம் ஸ்ரீ, மந்திரங்களின் உத்தாரம் சந்தியாவந்தனம் பூசை செபம் ஓமம் என்பனவற்றையும், சமய விசேட நிருவாண தீக்கை முறைகளையும்

சிவாசாரிய அபிடேக முறைகளையும் கூறும்.

யோகபாதம் ஸ்ரீ, பிராணாயாமம் முதலிய அங்கங்களோடும் கூடிய சிவயோகத்தைக் கூறும்.

ஞானபாதம் ஸ்ரீ, பதிபசுபாசம் என்னும் முப்பொருள்களின் இயல்பை உபதேசிக்கும்.

இதில், சரியைப் பாததிலும் கிரியைப் பாதம் உயர்வாகவும், கிரியைப் பாதத்திலும் யோகப்பாதம் உயர்வாகவும், யோகப் பாதத்திலும் ஞானபாதம் உயர்வாகவும் கொள்ளப்படும். அஃதாவது, சரியைக்காண்டத்திலும் கிரியைக்காண்டம் பரமாகவும், கிரியைக் காண்டத்திலும் யோகக்காண்டம் பரமாகவும் யோகக்காண்டத்திலும் ஞானக்காண்டம் பரமாகவும் கொள்ளப்படும். சிவாகம ஞானகாண்டம் சிவாகமந்தின் அந்தமாக விளங்குவதால், ஆகமாந்தம் என்று கூறப்படும். ஆகமாந்தமே முடிந்த முடிவாக விளங்குவதால், சித்தாந்தம் என்றும் கூறப்படும். சைவ சித்தாந்தம் என்பதும் ஆகமாந்தம் என்பதும் சிவாகம ஞானகாண்டமேயாகும். சிறப்பு நூல்கள் என்று கூறப்படும் சிவாகமங்களில் விளங்கும் ஞான காண்டமே சிவாகமங்களுக்குள் சிறப்பு என்றும் பரம் என்றும் உண்மையென்றும் போற்றப்படும்.

காமிக ஆகமத்தில் பூர்வபாகத்தில் தந்த்ராவதாரப் படலத்தில் “சைவசித்தாந்தமே தள்ளப்படுவன கொள்ளப்படுவன என்பவற்றைத் தீர்மானிக்கும் சாத்திரமாகும்” என்று கூறியிருப்பது ஆகமாந்தத்தின் உயர்வைச் சைவருக்கு உணர்த்தும்.

# சிவபூமியில் சிவனைத் தேடி

## மட்டக்களப்பு செட்டிபாளையம் சிவன் கோயில்



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

**"கதிரவன் விழித்திடும் கிழக்கினிலே
அலைகடல் மோதும் தரையினிலே
அமர்ந்தாய் சோமநாதராய் செட்டியூரினிலே"**

என்னும் கவிநயமான பாவிற்கேற்ப இலங்கையின் கிழக்குக்கரையில் அமைந்துள்ள மட்டக்களப்பில் செட்டியூர் என்று புகழப்படும் செட்டிபாளையம் எனும் பழம்பதியில் சோமநாதலிங்கேசுவரராய் சிவனார் அருள்புரிந்து வருகின்றார். இவ்வூர் மட்டக்களப்பு நகரிலிருந்து தெற்கே 12 மைல் தொலைவில் அமைந்துள்ளது. பழமைக் காலம் தொட்டு இந்தியச் செட்டிமார் வணிக நோக்கம் கருதி இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று வணிகம் புரியக் குடியேறினார்கள். குறிப்பாக யாழ்ப்பாண ஆரிய சக்கரவர்த்தி காலமிருந்து இந்தியச் செட்டிமாரின் இருப்பிடங்கள் கிழக்கின் பகுதிகள் சிலவற்றிலும் செல்வாக்குற்றிருந்தது. அந்தவகையில் இவ்வூரிலும் வருகை தந்த செட்டிமார் பாளையமடித்திருந்தார்கள் என்பதாகையால் செட்டிபாளையம், செட்டியூர் எனப் பெயர் பெற்றது என்பர். தமிழ்நாட்டிலும் செட்டிபாளையம் எனும் இடமுள்ளது. அங்கும் சிவனுக்குக் கோயில் உண்டு.




நீர் வளமும், நல்ல நில வளத்தால் கமத் தொழிலும், கற்றவர் வளமும், பொருள் பெற்றவர் வளமும் ஒருங்கே அமையப்பெற்ற இவ்வூரின் நடுவிலே சிவனாருக்குக் கோயிலும், இதனைச் சூழ வடக்கே விநாயகர் கோயிலும், தெற்கே கந்தசுவாமி கோயிலும், கிழக்கே வைரவ கோயிலும், மேற்கே பத்தினிக்கும் கோயில் உண்டு. தற்போதுள்ள சிவன் கோயில் வடக்கு நோக்கிய வாசலையும், ஆகம விதிப்படி விமானத்துடன் கூடிய கருவறை, அலங்காரத் தூண்களோடு பொருந்திய மண்டபங்கள், கொடிமர அமைப்பு, நந்தி பீடம், இராசகோபுரம், மணிக்கோபுரம், பரிபாரதேவர் கோயில்கள் என்பவற்றுடன் பிரமிப்பான அழகிய ஓவியங்களும், சிற்பங்களும் செறிந்தும் காணப்படுகின்றது.

இத்தலத்தின் தோற்ற வரலாற்றினை ஆராயும் போது, இக்கோயில் இருபதாம் நூற்றாண்டின் மூன்றாம் தசாப்த காலத்திலே தோன்றியதாகக் கூறப்படுகின்றது. இந்தியாவிலிருந்து 1939 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருகை தந்த சோமேஸ்வரானந்தகிரி எனும் சுவாமியால் திருகோணமலை, குருக்கள் மடம், செட்டிபாளையம் என்னும் இடங்களில் மடங்கள் அமைத்து ஆன்மீகப் போதனைகள் புரிந்து வருங்கால் திருகோணமலை குச்சவெளியில் உள்ள செம்பி மலையில் செம்பீசுவரர் கோயிலையும், குருக்கள் மடத்தில் கிருஷ்ணர்



இக்கோயிலின் சிறப்பு என்னவெனில் வழமையாக எல்லாச் சிவன் கோயில்களில் இடம் பெறும் மூர்த்தி, தலம், தீர்த்த அம்சங்களுக்குப் பதிலாக, வீரசைவப் பண்பாட்டைத் துலக்கும் குருலிங்க சங்க வழிபாடு மேன்மை பெற்றிருப்பதே ஆகும். இதற்குக் காரணம் சோமேஸ்வரானந்தகிரி சுவாமியின் மடப்பாராம்பரியங்களும் குரு போதனைகளும், சிவலிங்கப் பூசையும், ஆண், பெண் பத்தர்களை ஒன்றாக இணைத்து சங்கம வழிபாடியற்றிய பேறுகளின் விளைவுகளே ஆகும்.

இக்கோயிலில் தினப் பூசைகளும், வெள்ளிக்கிழமைகளில் விசேட பூசையும் நடைபெற்று வருகின்றது. வருடந்தோறும் சிவனிரவு (சிவராத்திரி), கேதாரகௌரி விரதம், கழுவாய் வழிபாடு, திருவாதிரை, ஒன்பானிரவு (நவராத்திரி) முதலிய விரத வழிபாடுகளும், தைவருடம், தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்திரம், சித்திரை நிறைமதி, ஆனி உத்தரம், ஆடி மறைமதி முதலிய விசேடப் பூசைகளும், திருவாதிரை விரத காலத்தில் மட்டும் திருவெம்பாவை ஓதுதல், திருவாசகப் படிப்பு, திருவிழா, இறுதிநாள் சமுத்திரத்தில் தீர்த்த மாடுதல் என்பனவும் இடம் பெற்று வருவதைத் காண முடிகின்றது.

இத்தலத்தின் மீதும் இவ்வூர்க் கவிஞர்களால் பல இலக்கியங்கள் தொடுக்கப்பட்டுள்ளது. இத்தலத்தின் வரலாறு பற்றி திருக்கேதீச்சரம் ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபை வெளியிட்ட **“ஈழத்துச் சிவாலயங்கள்”** என்ற நூலில் ஒரு கட்டுரையாகப் புனையப்பட்டுள்ளது. இதே போல் திருவருள் சங்க வெளியீடாக அமைந்த **“ஆனந்தகிரி”** பவளவிழாச் சிறப்பு மலரிலும் இத்தலத்தின் வரலாற்றை காண முடிகின்றது.

**“மக்கள் சேவையே மகேசன் சேவை”** என்பதற்கிணங்க செட்டியூர் சமூகத்தை ஒன்றிணைத்து சிவனார் கோயிலையும், செட்டி பாளையத்தில் சிவனார் கோயிலையும் உருவாக்கினார் என்று கூறப்படுகின்றது. இதற்கேற்றால் போல் சிவன் கோயிலின் அருகாமையில் இன்றும் அவருக்கும் திருவுருவப்பூசை நடைபெற்று வருவதையும், சுவாமியினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சிவன் கோயில் திருவருள் சங்கம் (1940), ஐக்கிய மாதர் சங்கம் (1940) ஆகிய திருப் பணிச் சபைகள் இன்றும் மூடப்படாமல் இயங்கி வருகின்றமையையும், செம்மிமலையில் உள்ள செம்பீசுவரப் பெருமானைச் செட்டிபாளைய சிவனடியார்கள் சென்று வழிபட்டு வருவதனையும் காண முடிகின்றது.

சுவாமி அவர்களால் இவ்வூரில் உருவாக்கப்பட்ட திருவருள் ஆண்கள் சங்கம், திருவருள் பெண்கள் சங்கத்தினரின் ஊடாக தற்போது உள்ள திருக்கோயில் இடத்தில் களிமண்ணால் மடம் ஒன்று அமைக்கப்பட்டு சிவவழிபாடும், வெள்ளிக்கிழமைகளில் பூசைகளும் இடம் பெற்று வந்தன. திருவருள் சங்கப் பெண்கள் ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமைகளில் கூடி தாம் வீடுவீடாகச் சேர்த்த பிடிஅரிசியினைச் சேர்த்து பூசைப் பணிக்காகக் கொடுத்து வந்தனர். இவ்வாறு இக்கோயில் மடத்தில் தோன்றி வளர்ந்தமையால் இன்றும் இவ்வூரார் **“மடத்துக் கோயில்”** என்று பழமை மாறாது போற்றி வருகின்றனர். சுவாமியின் இறைபதத்தைத் தொடர்ந்து மடம் இருந்த இடத்தில் புதிய கோயில் ஒன்று அமைக்கப்பட்டு, நுன்மதி வருடம் ஆனிமாதம் நான்காம் தேதி தட்சணாமூர்த்த வேளையில், இறை திருவருள் கூட்டி பின்பு இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட சிவலிங்கத்திற்கு ஆகம முறைப்படி திருகுடமுழுக்கு விழா 1981-06-18 அன்று நிறைவேற்றப் பட்டது. அன்றிலிருந்து சுவாமியின் பெயரை நினைவிற் கொண்டு அங்கு அருள் சுரக்கும் சிவனை சோமநாதலிங் கேசுவரர் என்றும் இறைவியாரை சோமகலாநாயகி என்றும் பெயரிட்டுப் போற்றலாயினர். இதன் பின்பு 1996ஆம் ஆண்டு திரு குடமுழுக்குப் பெற்று கீர்த்தியும் பெற்றது.




ின் பெயருடன் சங்கம் அமைத்து, சமயம், சமூகம், கல்வி எனப் பல்துறை சார்ந்த ஆக்கபூர்வமான தொண்டுகளைப் புரிந்து சமய சமூக மேம்பாட்டிற்கு உதவி வரும் திருக்கோயிலாகவும் விளங்குகின்றது.

**“சிவ சிவ என்றிட சிவ கதி தானே”**

**திருச்சிற்றம்பலம்**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

## ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தம்பிரான்தோழர்




**"சுந்தரத் திருத்தொண்டத் தொகைத்தமிழ்**
**வந்து பாடிய வண்ண முரைசெய்வோம்"**
**செங்கல் பொன்னாக்கப் பெற்றதும்,**
**இறைவன் வழிகாட்டப் பெற்றதும்**

நம் நாயனார் திருவாரூரில் வீற்றிருந்த காலை, கோட்புலி நாயனார் தமது திருப்பதிக்கு எழுந்தருளும்படி வேண்ட அதற்கிசைந்து திருவாரூர்ப் பெருமானிடம் விடைபெற்றுப் பல பதிகளையும் வணங்கிச் சென்று கோட்புலி நாயனாரது ஊராகிய திருநாட்டியத்தான் குடியை நெருங்கிய காலை, அவர்தம் ஊரைக் கவினுறச் செய்து நாயனாரை எதிர் கொண்டு வரவேற்றுப் பேரார்வத்துடன் தமது திருமாளிகைக்கு அழைத்துச் சென்று தூய பொற்பீடத்தில் இருத்தி நற்புனல் கொண்டு அவர்தம் திருவடிகளை விளக்கி அவ்விளக்கிய நீரை வீடெங்குந் தம்மேலுந் தெளித்துக் கொண்டு மலர் தூவிப் போற்றினர்.

செஞ்சந்தனக் குழம்பு, அகிற்சாந்து, கத்தூரிக்கலவை, பச்சைக் கருப்பூரம் முதலியன கலந்த வெற்றிலைச்சுருள் முதலியவற்றைப் பல பொற்றட்டுகளில் ஏந்திப் பலவகை நறுமலர் மாலைகள், மணிகளாலியன்ற அணிகலன்கள், பல்வகைப் பரிவட்டங்கள் முதலியவற்றை வரிசை வரிசையாக எடுத்துக் கொடுத்து நாயனாருக்கு அளவற்ற சிறப்புச் செய்தனர். அரசனுக்கு உரிமைப் படைத்தலைவராகிய கோட்புலியார் நாவலூர்ப் பெருமானைத் தமது திருமனையில் திருவமுது செய்வித்துத் தம் அருமைப்புதல்வியராகிய சிங்கடியார், வனப் பகையார் என்னும் இரு கன்னியரையும் அவர்தம் திருவடி களை வணங்கும்படி செய்து தாமும் தொழுது அடியேன் பெற்ற மக்கள் இவ்விருவரையும் அடிமையாகக் கொண்டருளி அவர்கள் உமது தாளைத் தொழுதுய்யும்படி கருணையளிக்க வேண்டுமென்றார். அவர்கள் எனக்கு நற்புதல்வியரென்று நம் நாயனார் தமது மடிமிசை வைத்துத் தூய உள்ளன்போடு உச்சிமோந்து அவர்களுக்கு வேண்டுவனவற்றைக் கொடுத் தருளித் திருக்கோயிலை அடைந்து, 'பூணாணாவதொ'ரென் றெடுத்த திருப்பதிகத்திலே கோட்புலியாரது அருளிரிமையைச் சிறப்பித்துப் பாடி அப்பதிகத்தின் திருக்கடைக் காப்ப தனிற் சிங்கடியப்பனென்று தம்மைச் சிங்கடியாரின் தந்தையாகக் குறிப்பித் தருளினார்.

பின்னர் அவ்விடத்தின்றும் புறப் பட்டுத் திருவலிவலத்தைச் சேர்ந்து மங்கைபாகரை அவ்விடத்துக் கண்ட தாகத் தமிழ்மாலை பாடித் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் என்னும் பெரியாரது பாட்டினை நீர் உவந்தீ ரென்று கடவுளைச் சிறப்பித்து விடை பெற்றுத் திருவாரூரடைந்து பரவை யோடு வீற்றிருக்கு நாளில் பங்குனி உத் திரத்திருநாள் நெருங்குதலும், பரவை யார் திருநாளில் வந்த அடியாருக்கு வேண்டுவனயாவுங் கொடுத்துக் குறை வறுத்தற் பொருட்டுப் பொன் தேடிக் கொண்டு வருவான் திருப்புகலூர்ப் பெருமானை வணங்கப் புறப்பட் டார். திருப்புகலூரினையடைந்து சிவ பெருமானை இறைஞ்சித் திருப்பதிகம் பாடி ஒரு திருமடத்தில் செல்லாது திருக்கோயில் முற்றத் திலிருந்த போது தூக்கம் வர அங்கே திருப்பணிக்காகக் குவித்துக் கிடந்த சில செங்கற்களை எடுத்துத் தலைக்குயரமாக வைத்து அதன்மேல் வெண்பட்டு மேலாடை விரித்துத் தலை வைத்துத் துயில் கொண்டார். பிற தொண்டர்களுந் துயின்ற னர். நம் நாயனார் துயில் நீங்கியவுடன் சிவபெருமானது திரு வருளினாலே செங்கற்கள் செம்பொற்கற்களாக விருக்கக் கண்டு திருவருளை வியந்து திருக்கோயில் புகுந்து அளவிற் கடங்காத காதலுடன், **'தம்மையே புகழ்ந்து'** என்னும் இன்னி சைப்பதிகம் பாடினார்.

பின்னர் நிதிக்குவையினை எடுத்துக்கொண்டு திருப் பனையூருக்குச் சென்று இறைவரது திருக்கூத்துக் காட்சியைக் கண்டு பெருவிருப்போடு வீழ்ந்திறைஞ்சித் திருப்பதிகம் பாடிச் செம்பொற் செங்கற்களை ஓர் ஆளிடங் கொடுத்துப் பரவையார் திருமனைக்கு அனுப்பி விட்டுத் தாம் திருக்கோயில் புக்குச் சிவபெருமானை வணங்கிப் பரவையார்மனை சேர்ந்தனர். அங்கிருக்கு நாளில் திருவாரூருக்கு அருகிலுள்ள பல திருப் பதிகளையும் வணங்கினர். பின்னர்த் திருநன்னிலத்திற்குப் போய் இறைவனை வணங்கித், 'தண்ணியல் வெம்மையி னான்' என்னுந் திருப்பதிகம் பாடினர். அப்பால், நம் நாயனார் திருவீழிமிழலைக்குச் செல்ல அங்கே அந்தணர்களெல்லாரும் நடைப்பந்தரிட்டு மிக்க சிறப்புடன் அவரை எதிர்கொள்ள மிகுந்த உவகையுடன் அத் திருப்பதியின் கண் விண்ணிழி விமானத்தில் வீற்றிருக்கும் முதல்வனைப் பணிந்து பாடிப் பரவினர். பின்னர்த் திருவாஞ்சியம், அரிசிற்கரைப் புத்தூ ர் முதலிய பதிகளை வணங்கியேத்தித் திருப்புத்தூரின்கண் புகழ்த்துணை நாயனாரது பெருமையைப் புகழ்ந்து பாடி னர். திருவாவடுதுறையடைந்து இறைவனை இறைஞ்சி, **'மறையவன்'** என்றெடுத்த திருப்பதிகத்திற் செங்கணான் பிறப்பைச் சிறப்பித்தனர்.

காவிரியின் தென்கரையில் திகழ்ந்த திருப்பதிகள் பலவும்

பணிந்துபோய்த் திருவிடைமருதையணைந்து பரமர்க்குத் தமிழ் மாலை சாத்தித் திருநாகேச்சுரம், சிவபுரம், திருக்கலய நல்லூர், திருக்கண்டியூர், திருவையாறு, திருப்பூந்துருத்தி, திருவாலம் பொழில் முதலிய திருப்பதிகளை வணங்கித் திருவாலம் பொழிலிலே ஓர் இரவு தூங்கும்போது சிவ பெருமான் தம்முடைய இளந்திருக்கோலத்தைக் காட்டி. **“மழபாடிக்கு வர மறந்தாயோ”** என அருளிச் செய்ததை உணர்ந்து காவிரியின் வடகரைக்குச் சென்று திருமழ பாடியை யணைந்து அங்குறையும் அண்ணலைத் தொழுது, **“பொன்னார் மேனியனே”** என்னும் திருப்பதிகம் பாடி அங் குச் சிலநாள் தங்கினார். பின்னர்த் திருவானைக்காவினை யடைந்து, ‘மறைகளாய நான்கும்’ என்ற செஞ்சொன்மாலை சாத்தி, உறையூர்ச் சோழனது மணியாரமானது காவிரியில் நழுவிவிட இறைவன் அதைத் திருமஞ்சனக் குடத்திற் புகு வித்துத் திருமஞ்சனமாடுங்காலை அதனைத் திருமேனியிற் கொண்டு வளவனுக்குக் காட்டி அவனது தளர்ச்சி நீக்கிய திறத்தைத் திருப்பதிகத்தின்கண் விதந்தோதினார். பின்னர்த் திருப்பாச்சிலாச்சிராமத்தையடைந்து பரமனை வணங்கித் தமது பொருள் விருப்பினைத் தெரிவிக்க, நினைந்த வண்ணம் பொருள் பெறாமையின் உள்ளம் புழுங்கி, **“பித்தரே யொத்தோர் நச்சிலராகில் இவரலா தில்லையோ பிரானார்”** என்பது போன்ற முடிவுடைய திருப்பதிகத்தைப் பாடித் திருக் கடைக்காப்புச் சாற்றியவுடன் சிவபெருமான் சிறந்த நிதிக் குவியலை அளித்தருளப், பின்னர்த் திருப்பைஞ்ஞீலி யடைந்து சிவபெருமானது பிச்சைபுகும் வடிவத்தைக் கண்டு பேரன்பினால் கண்மழை பொழிந்து கைகுவித்திறைஞ் சிச் சிவபெருமான் ஐயம் ஏற்று ஊண் எடுத்த வடிவத்தைக் கண்டவர்கள் மயல்கொண்டு வினவிய கூற்றாகக் **“காரு லாவிய”** என்னுந் திருப்பதிகம் பாடினர்.

பின்னர் ஈங்கோய்மலை முதலிய திருப்பதிகளை வணங்கிக் கொங்கு நாட்டிலுள்ள திருப்பாண்டிக்கொடுமுடியடைந் தார். அவ்விடத்தில், “மற்றுப் பற்றெனக்கின்றி” என்னும் நமச்சிவாயத் திருப்பதிகம் பாடியருளினர். பின்னர்த் திருப் பேரூர்க்குச் சென்று அவ்வூர்த் திருக்கோயிலின்கண் தில் லைப்பிரானது திருக்கூத்து வடிவங்கண்டு அளவற்ற அன்புடன் வணங்கிப் பேரின்ப வெள்ளத்துட்டிளைத்தாடினர். பின்னர்த் தில்லைப்பெருமான் திருக்கோலத்தைக் காண்பான் எழுந் தருளினர். திருவெஞ்சமாக் கூடல் திருக்கற்குடி, திருவாறை மேற்றளி, திரு இன்னம்பர், திருப்புறம்பயம் முதலிய தலங் களை வணங்கினர். பின்னர்ப் பல திருப்பதிகளையும் வணங்கிக் கூடலையாற்றூர்க்கருகாகச் சென்று அப்ப திக்கு ஏகாது திருமுதுகுன்றை நோக்கிப் புறப்பட்டார். அப் போது இறைவர் நம் நாயனார் செல்லும் வழியிலே ஓர் அந்த ணர் வடிவத்தோடு நின்றனர். அவரிடம் திருநாவலூரரர் திருமுதுகுன்றத்துக்கு வழி யாதென வினவ, அவ்வந்தணர் கூடலை யாற்றூர்க்குச் செல்லும் இவ்வழிதான் அவ்வழி என்று சொல்லி வழித்துணையாகச் சிறிது தூரஞ் சென்று மறைந்துவிடவே, **“வடிவுடைமழு”** வென்னுந் திருப்பதிகந் தொடங்கி ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் **“அடிகள் இவ்வழி போந்த அதிசய மறியேனே”** என்னுஞ் சொற்றொடரமைத் துப் பாடிக்கொண்டு கூடலையாற்றூர் புகுந்து இறைவனை வணங்கிப் போற்றித் திருமுதுகுன்றினை அடைந்து பரமர்க்குச் செஞ்சொன் மாலை சாத்தினர். ஆண்டுப் பொருள் வேண்டுங் குறிப்போடு இன்னிசைப் பதிகம் பாட, இறைவர் பன்னீரா யிரம் பொன் கொடுத்தருளினர்.

திருமுதுகுன்றத்து முதல்வரிடந் தாம் பெற்ற பொன்ன னைத்தையும் யாவரும் வியக்குமாறு திருவாரூரிலே கிடைக் கும்படி செய்ய வேண்டுமென்று நம் நாயனார் வேண்டிக் கொள்ள இறைவனும் **“மணிமுத்தாற்றினிற் பொருள் முழுவதை யும் இட்டுத் திருவாரூர்க் குளத்திற் போய்க் கொள்க”** என்றருளி னார். வன்றொண்டர் அவ்வாறே செய்வதற்குமுன் பொன் னின் ஒரு துண்டினை வெட்டி மச்சமாகக் கைக்கொண்டு எஞ்சியதனை மணிமுத்தாற்றினில் இட்டுவிட்டு, **“என்னை வலிந்தாட் கொண்ட அருளினை இதில் அறிவேன்”** என்று கூறிக்கொண்டு தில்லை நோக்கிச் சென்று வழியிலே கடம்பூர் முதலிய திருப்பதிகளை வணங்கித் தில்லைமூதூரணிந்து திருவம்பலம் நண்ணிக் கூத்தப் பெருமான் பொற்றாள்களைக் கழிபேரன்போடு தொழுது தாம் இறைவனைப் பேரூரிற் கண்ட நிலையைச் சிறப்பித்து, **‘மடித்தாடு மடிமைக்கண்’** என்னுந் திருப்பதிகத்தைப் பாடி மீளாதருள் பெற்றமர்ந்தார்.

பின்னர் அங்கு நின்றும் பெயர்ந்து போய்த் திருக்கருப்பறிய லூர், திருக்குரக்குக்கா முதலிய திருப்பதிகளை வணங்கிப் பாடித்திருவாழ்கொளிபுத்தூரைத் தொழுது திருக்கானாட்டு முள்ளூரை அடைந்தனர். அவ்விடத்தே இறைவன் எதிர் நின்று காட்சி கொடுக்கக் கண்டு “வள் வாய்” என்னும் வண்டமிழின் தொடைமாலை சாத்தினர். பின்னர்த் திருஎதிர்கொள்பாடி, திருவேள்விக்குடி, திருத்துருத்தி முதலிய திருப்பதிகளைத் தொழுது பாடித் திருவாரூரினை அடைந்து தொண்டருடன் புற்றிடங் கொண்டாரைத் தொழுது போந்து பரவையார் திருமாளிகையினை அடைந்தார்.

பரவையார் தம் தோழியருடன் சென்று நாயனார் திருவடி களை வணங்கி எங்களையும் நினைத்தருளினீரென இன்மொழி பகர, அதற்கு உவந்து அவரோடு மகிழ்ந்துறையும் நாளில் ஒருநாள் “முதுகுன்றர் நமக்கு அளித்த பொன்னனைத் தையும் மணிமுத்தாற்றினில் புகவிட்டோம் இறைவரது திருக்கோயி லுக்கு மேல்பால் திருக்குளத்துக்குச் சென்று அதனை எடுத் துக்கொண்டு வருவோம்வா’ வென்று கூறினார். இஃது என்ன புதுமையென்று பரவையார் புன்முறுவல் செய்ய, **“என்னுடைய தலைவனது அருளால் திருக்குளத்தினின்றும் பொன் முழுவதை யும் எடுத்துக்கொடுப்பது திண்ணம் நான் சொல்வது பொய்யாது”** என்றனர். உடனிசைந்து அவருடன் திருக்கோயில் வலம் வந்து பரவையாரும் திருக்குளத்தின் வடகீழ்பால் கரையை அடைந்தனர். திருநாவலூரரர் இறைவனைக் கைதொழுது குளத்திலிறங்கிப் பொன்னினை எடுத்தற்குத் தடவினர். சிவ பெருமான் இவருடைய திருப்பாட்டினைப் பெறுவதற்கு விரும்பிச் செம்பொனை வருவியாதிருப்பப் பரவையாரும் **“ஆற்றிலிட்டுக் குளத்திற் றேடு கின்றீரே” இதுவோ திருவருள்? சொல்லும்”** என்ற அளவில், இறைவனை நோக்கிப் **“பரவை நகையாடாத வண்ணம் முன்னே நீர் அருள்செய்தபடி பொன் னினைத் தாரு”** மென்று **“பொன்செய்த மேனியினீர்”** என்று திருப்பதிகம் இசைத்தனர். எட்டாவது திருப்பாட்டளவும் பொன்னினை நாயனார்க்குக் காட்டாதிருந்தனர்.

‘ஏத்தாதே இருந்தறியேன்’ என்னுந் திருப்பாட்டினைப் பாடியவுடன் பொன்திரளானது கைக்கு வர அதனைக் கரை யிலிட்டனர். அப்பொழுது விண்ணவர் மலர்மாரி பொழிந்த னர். மண்ணவர் எல்லையற்ற வியப்பெய்தினர். எடுத்த பொன்னினை ஆணியிலுரைத்து முன்வைத்திருந்த மச்சத் தோடொத்துப் பார்க்கும் பொழுது எடுத்த பொன் மாற்றுக் குறைதலைக் கண்டு மீட்டும் இறைவனைத் திருப்பதிகம் பாடித் தொழுது மாற்றொப்புக் கண்டபின் பொன்னினை ஆளின்மேற்சுமத்தி வீட்டிற்கு அனுப்பிவிட்டுத் தாம் திருமூல நாதரைத் தொழுது திருமாளிகையை அடைந்து சேயிழை யாருடன் உள்ள நிறைவெய்தியிருந்தார். அங்குறையும் நாளிலே நம் நாயனார் பல திருப்பதிகங்கள் பாடியருளினார்.

**திருச்சிற்றம்பலம்**

**ஏயர்கோன்கலிக்காம நாயனார் புராணம் - (29-48)**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**படம்-தேவராஜன் நடராஜன்** அவர்களின் முகநூலில் இருந்து

# சொற்சிலம்பம்-2

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | 02 | | 03 | | 04 |
| | ■ | ■ | | ■ | 04 | ■ | |
| ■ | 05 | | | ■ | 06 | | |
| 07 | | ■ | | ■ | | ■ | |
| | | ■ | 08 | | | ■ | |
| | | ■ | | ■ | ■ | 09 | ■ |
| ■ | | ■ | 10 | | | | ■ |
| ■ | ■ | ■ | ■ | ■ | 11 | | |

### இடமிருந்து வலம்

*01.* திருவாதவூரடிகள்
*05.* திருக்கோயிலில் அனைவரும்
*06.* இறைவழிபாட்டில் பயன்படும் பழம் (குழம்பி)
*07.* மேகம்
*08.* சிறுதொண்டரின் உணவில் இருந்தது
*10.* மனிதனை நல்வழிப்படுத்துவது (குழம்பி)
*11.* பழந்தமிழர் கலைவடிவம்

### மேலிருந்து கீழ்

*01.* சிவன் கையில் இருப்பது
*02.* கோயில் மரங்களில் ஒன்று
*03.* இன்பத்தைக் கொடுப்பவன்
*04.* நாயன்மார்களில் ஒருவர் (குழம்பி)
*05.* சிவனுக்கு ஆபரணம்
*07.* இராவணன் பாடியது
*09.* திருப்புகழ் பாட இது விலகும்

*பாடசாலை மாணவர்கள், மேலே உள்ள சொற்சிலம்பத்தை பிரதிசெய்து, அதனைப் பூர்த்தி செய்து, பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன், உங்கள் முழுப்பெயர், தொடர்பு இலக்கம், முகவரி என்பவற்றுடன் வங்கி கணக்கு விபரத்தையும் அனுப்பி வைக்கவும். வெற்றியாளர்களுக்கு 500/- ரூபாய் பணப்பரிசில் வழங்கப்படும்.*

**அனுப்பவேண்டிய இறுதித் திகதி:**

**வைகாசித் திங்கள் 19 ஆம் நாள் (02-06-2025)**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,**
**தென்னாடு வீதி, கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
+94 21 222 9722 | +94 70 770 1111

# சொற்சிலம்பம்-1

**(கடந்த திங்கள் சொற்சிலம்பத்திற்கான விடைகள்)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 உ | த் | த | ர | ம் | ■ | 02 ப | 03 தி |
| லோ | ■ | ■ | ■ | ■ | 04 வி | அ | ரு |
| 05 கா | க் | னை | 06 வா | ரு | 07 தி | ■ | வ |
| யு | ■ | ■ | ரி | ■ | ல | ■ | ண் |
| த | ■ | 08 த | வ | ■ | க | ■ | ணா |
| ம் | ■ | ர் | ன | ■ | 09 ம் | 10 க | ம |
| ■ | 11 ச | ம | ம் | ■ | ■ | ரு | லை |
| 12 சி | வ | ம் | ■ | 13 த | வ | ணை | ■ |

### இடமிருந்து வலம்

*01.* நட்சத்திரகளில் ஒன்று
*02.* அறிவிக்காமலே அறிவது
*04.* நீர் ஓட்டம் (குழம்பி)
*05.* சிலந்தி, யானை தொடர்புடைய சிவத்தலம் (திரும்பி)
*08.* முனிவர்களுக்கு அடைமொழி
*09.* நட்சத்திரங்களில் ஒன்று (திரும்பி)
*11.* திருக்கோயிலில் அனைவரும் இப்படி மதிக்கப்படுவர்
*12.* ஆனந்தமயமானது
*13.* காலப் பகுதியைக் குறிக்கும்

### மேலிருந்து கீழ்

*01.* மெய்யியல் தத்துவங்களில் ஒன்று
*03.* நினைத்தாலே முத்தி தரும் சிவத்தலம்
*04.* மதியால் வெல்லலாம்
*06.* சாவகச்சேரி நகரில் அமையப்பெற்ற சோழர்கால சிவன் கோயில்
*07.* பெண்கள் அணிவது
*08.* இது தலை காக்கும்
*10.* அனைத்து உயிர்கள் மீதும் நாம் காட்ட வேண்டியது





# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம்.    www.thennadu.org



சிவத்திரு. சிவ. செந்தமிழாதன், இளம்புலவர் - தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 575 2551 / aathan@thennadu.org

# மனதுக்கு மருந்து சைவம்!

மனித வாழ்க்கையின் அடித்தளக் கேள்விகள் எவையென்றால், “நாம் யார்? எதற்காக பிறந்தோம்? எங்கு செல்கிறோம்?” என்ற எம்மைப் பற்றிய கேள்விகளே! இக்கேள்விகளுக்கான பதிலை நம் முன்னோர்கள் பல வழிகளிலும் தேடியுள்ளனர். இந்திய கலாச்சாரத்தில், குறிப்பாக தமிழ் மரபில், இந்தக் கேள்விகளுக்கு பதிலாக அமைந்த பெரும் ஒளியாக சைவ சமயம் விளங்கு கிறது. சைவம் என்பது வெறும் ஒரு மதமாக இல்லாமல், ஒரு முழுமையான வாழ்வியல் நெறியாக விளங்குகின்றது.

சைவம், வேதத்தின் அடிப்படையை ஏற்றுக்கொண்டு, அதை தனித்தமிழ் வழியில் உருமாற்றிய ஒரு நுண்மையான ஆன்மீக இயக்கம். சைவ சித்தாந்தம், பதி,பசு,பாசம் எனும் மூன்றுவகை அடிப்படையில் ஆன்மா, கடவுள் மற்றும் கட்டுபாடுகளைப் புரிந்து கொள்ளும் ஒரு ஞானப் பாதையை வகுப்பதாகும். இது மனி தனை இறைவனுடன் ஒன்றடையும் பயணத்தில் வழிநடத்தும் ஒரு உன்னத மார்க்கம்.

இன்றைய வேகமிகுந்த உலகில், தனிமை, மன அழுத்தம், நோய்கள், சூழலியல் பிரச்சனைகள் என பல்வேறு சவால்கள் நமக்கெதிராக எழுகின்றன. இந்த நிலையில், ஆன்மீகம் ஒரு ஆழமான நிலைத்தன்மையை அளிக்கக் கூடிய ஒரு புனித வழி. அதில் சைவம், ஒழுக்கம்,பத்தி, கருணை, சேவை போன்ற உயர் விழுமியங்களை கொண்டு மனிதனின் உள்ளத்தை துய்மையாக்கும் தன்மை கொண்டது.

நாயன்மார்கள் எனும் அறுபத்து மூவர், சைவத்தின் தூண் களாக திகழ்ந்தவர்கள். அவர்களது பாடல்களில் இறைவனுக்கான பரிவு, பத்தி, தியாகம், போன்ற சமூகப்பணிகளும் உள்ளடக் கியுள்ளன. பன்னிரு திருமுறைகள், சைவத்தின் ஆன்மீகத்தை பல்லாயிரம் ஆண்டுகளாக உயிரோடு வைத்துள்ளன. இவை தமிழரின் ஆன்மீக அடையாளமாகவும், மொழி மற்றும் பண் பாட்டின் ஆதாரமாகவும் திகழ்கின்றன.

சைவ சித்தாந்தம், மீறக்கூடாத ஒரு தத்துவ ஒழுங்க மைப்பு. இதில், பசு (ஆன்மா) பாசத்தில் (துன்பம், பந்தம்) சிக்கிக் கொண்டிருக்கும் நிலையில் இருந்து, பதியான சிவனை அடைய வேண்டும் என்பதே குறிக்கோள். இந்த அடைதலை ஞானம், பத்தி, செயல்பாடு மூலமாகவே பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு சைவம், ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட ஆன்மீக நடைமுறையா கும். இது நமக்கு முழுமையான ஆழ்ந்த வாழ்க்கை முறையை வழங்குகிறது.

தவறான பல முடிவுகளை எடுத்து தம் உயிரையே மாய்த் துக்கொள்ளும் இன்றைய இளம் தலைமுறைக்கு, சைவம் என்பது பலருக்குத் தெரியாமலோ அல்லது தொன்மையானதாக மட்டுமே நினைக்கப்படுவதாலோ, அவர்கள் அதிலிருந்து விலகி உள்ளனர். ஆனால் உண்மையில், சைவத்தில் உள்ள பல அம்சங்கள் மனஅழுத்தத்தை சமாளிக்கும் பத்தி வழிபாடுகள், மன சாந்திக்கு ஏற்ற தவ முறைகள், சேவை மனப்பான்மை, சூழலியல் விழிப்புணர்வு எனத் தேவையான விடயங்களாகவும் உள்ளன. இதனை நவீன நடையில் விளக்கிக் கொடுத்தால், இளம் தலைமுறையும் இதில் ஈர்க்கப்படலாம்.

இன்றைய தகவல் தொழில்நுட்ப உலகில், ஆன்மீகம் ஒருவித மேம்பாட்டு உந்துதலாக விளங்குகிறது. மக்களிடம் உளவியல் நலனையும், வாழ்க்கையின் நோக்கையும் ஆராயும் வகையில் சைவம் செயல்படுகிறது. ஒரு தனிமனிதனாக, சமூக உறுப்பி னராகவும் நாம் ஒரு பொருளுள்ள வாழ்வை மேற்கொள்வ தற்கான வழி இதுவாகும். அத்தகைய சைவ சிந்தனையை, மெல்லிய வழிகளில், புரிந்து கொள்ளும் வாய்ப்பை நாம் தான் உருவாக்க வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

# துலாமையில் சிறந்த தூயவான் எம்பிரான் அமர்நீதி நாயனார்



செல்வி.
நவிசா ஈஸ்வரானந்தம்
கலைமாணி

வேதமே கோவணமாகக் கொண்ட பெருமானால் கோவணம் மூலம் ஆணவம் களையப்பட்டவர்:

பரந்து விரிந்த உலகில் வாழும் அத்தனை உயிர்களுக்கும் பிறர் பொருட்டு ஆயிரம் உதவிகள் புரிந்தாலும் அச்செயலை எல்லாம்வல்ல பரம்பொருளே தன்னைக் கருவியாகக் கொண்டு செய்கின்றார் என்ற சிந்தையில் நான் என்ற ஆணவத்தை களைந்து இறைவன் பால் பத்தி கொண்டால் இறைவனுடைய திருவருள் எமக்கு முழுமையாக கிட்டும் என்பதை தனது வாழ்வியல் அனுபவமூடாக இவ்வுலக மக்களுக்கு புரிய வைத்தவர்: உலகிலுள்ள எல்லாச் செல்வங்களும் சிவனுடைய கிழிந்த கோவணத்துக்கு ஈடாகாது என்பதை இவ்வுலகிற்கு புரிய வைக்க கருவியாக விளங்கியவர்: **“கோதில் அன்பரும் குடும்பமும் குறைவறக் கொடுத்த ஆதிமூர்த்தியாருடன் சிவபுரியினை அணைந்தார்”** எனச் சேக்கிழாரால் போற்றப்பட்ட சிறப்பிற்குரியவர்: துலாமையை தன் சரணாகதியால் நேர் நிறுத்தியவர் என்ற பெருமைக்குரியவர்: கடமைக்கு உணவளிக்காது அடியார்கள் எவ்வண்ணம் உண்ணுவார்களோ அவ்வண்ணம் நியதிகள் எல்லாம் பின்பற்றி எல்லவகை உணவுகளும் தயாரித்து வழங்கும் அன்பர்:

**“அல்லிமென் முல்லையந்தா ரமர்நீதிக் கடியேன்”**


என சுந்தரரமூர்த்தி நாயனாரால் போற்றிப் பாடப்பட்டவர் இத்தனை சிறப்புக்களும் பொருந்தியவராக சோழநாட்டிலே பழையாறை என்ற தலத்தை தனது அவதாரத்திருத்தலமாகக் கொண்டவர் அமர்நீதி நாயனார் ஆவார். சேக்கிழார் திருத்தொண்டத்தொகையிலே

**மன்னு மப்பதி வணிகர்தங் குலத்தினில் வந்தார்**
**பொன்னு முத்துநன் மணிகளும் புந்துகின் முதலாக**
**வெந்நி லத்தினு முள்ளன வருவளத் தியல்பா**
**லந்நி லைக்கண்மிக் கவலமர் நீதியா ரென்பர்**

**(திருத்தொண்டர் புராணம்,494)**

எனத் தொடங்கி இவருடைய தோற்ற வரலாற்றை தெளிவாகவும், சுருக்கமாகவும் பாடியுள்ளார். பொன்னும் முத்தும் ஏனைய நன்மணிகள் என எல்லா வளங்களும் விளைகின்ற பழையாறை எனும் தலத்தில் வணிககுலத்தில் உதித்த இவர் வியாபார நுணுக்கங்களை எல்லாம் துறைபோக கற்றிந்து தனது வியாபாரத்தை உலகெங்கும் சென்று திறம்பட செய்து வந்தவர்.

வியாபாரத்திற்காக உலகெங்கும் பயணித்த இவருக்கு திருநல்லூரில் எழுந்தருள் பாலிக்கும் பரம்பொருள் மீது காதல் ஏற்பட்டது. இறைவன் மீது கொண்ட காதலினால் நேரம் கிடைக்கும் போதெல்லாம் சென்று வழிபட்டு வந்த இவருக்கு இறைவன் மேல் தீராக்காதல் ஏற்பட, தனது ஊராகிய பழையாறையை விட்டு தனது குடும்பத்தோடு திருநல்லூரிற்கு சென்று வீடமைத்து ஒரு மடமும் கட்டி குடும்பத்தோடு சிவனடியார்க்கு அன்னம் அளித்ததோடு, உலகெங்கும் வியாபாரத்திற்காக செல்லும் போது கிடைக்கின்ற விலையுயர்ந்த துணிகளை எடுத்து வந்து கௌபீனம்



தயாரித்து, திருநீற்றுடன் இலவசமாக வழங்கும் தருமத்தை நெடும் காலமாக செய்து வருகின்றார் என்பதை

**"அந்திவண்ணர் தம் அடியவர்க்கு அமுது செய்வித்துக்**
**கந்தை கீளுடை கோவணம் கருத்து அறிந்து உதவி"**
**(திருத்தொண்:பா:504)**

என்ற பெரியபுராணப் பாடல் விளக்குகின்றது. இவருடைய பெருமையை உலகிற்கு எடுத்துரைக்க திட்டமிட்ட பரம்பொருள் தண்டம் ஏந்திய திருக்கரத்தோடு சிவனடியாராக வேடம் கொண்டு இவருடைய மடத்திற்கு வந்த போது சிவனடியாரை மகிழ்வோடு வரவேற்று அமுது செய்ய வேண்டும் என விண்ணப்பம் செய்தார். அப்போது இறைவன் உணவு உண்ணும் போது நிறைய நியதிகள் உள்ளது எனக் கூறிய போது, சுவாமி இம்மடத்திற்கு வரும் அடியார்கள் உண்ணும் அனைத்து உணவுகளும் அவரவர் பின்பற்றும் நியதிகள் எல்லாம் பின்பற்றி எல்லவகை உணவுகளும் இங்கு தயாரிக்கின்றோம் என்றார்.

உணவை உண்பதற்கு முன்பாக நான் காவிரியில் நீராட வேண்டும். அதுவரை உன்னிடத்தில் ஒரு பொருளை கொடுத்து விட்டு போகலாம் என நினைக்கின்றேன் என்ற போது, அமீர் நீதி நாயனார் என்ன பொருள் என வினாவ தண்டத்தின் மேற் பகுதியில் இருந்த கோவணத்தை கழட்டி அமிர்நீதி நாயனாரிடம் கொடுத்து விட்டு மழை பெய்தால் நனைந்து விடும் ஆகையால் இதை நீ கவனமாக வைத்துக் கொள்ள என்று சொல்ல சுவாமி இதுபோல் பல கோவணங்கள் என்னிடம் இருக்கின்றது ஆகையால் கவலைப்பட வேண்டாம் என்று கூற இல்லை எனக்கு என்னுடையது தான் வேண்டும் கவனமாக வைத்திரு என கூறினார்.

அப்போது அமர்நீதி நாயனார் அதை வாங்கி வணங்கி ஒரு பேழையில் வைத்து விட்டு தன் வேலையை பார்க்க தொடங்கினார். நீராடி திரும்பி வருகையில் மழை பெய்தது மழையில் நனைந்து நடுங்கிய படி வந்து தன்னுடைய காய்ந்த கோவணம் எங்கே என்று கேட்க உடனே உள்ளே சென்று தான் வைத்திருந்த பெட்டியை திறந்து பார்க்கின்றார். கோவணத்தை காணவில்லை. உடனே சிவனடியாரிடம் வந்து காணவில்லை என்று கூற, அப்போது சிவனடியார் இக்கோவணம் வெளியில் உள்ளவர்களால் திருடப்படவில்லை என்று கூற அவ்வாறாயின் சுவாமி என்னை நீங்கள் சந்தேகப்படுகின்றீர்களா? நான் எத்தனையோ கோவணங்களை தயாரித்துக் கொடுக்கின்ற போது உங்கள் கோவணத்தை ஏன் திருடப் போகின்றேன் என்ற கூற்று அவரிடத்தில் உள்ள ஆணவ வெளிபாட்டை காட்டியது.

அந்த ஆணவத்தை களைய வேண்டும் என்று மேலும் அவரை சோதிக்க தொடங்கினார். மீண்டும் சுவாமி அவ்வாறாயின் நீ திருடவில்லை என்கிறாயா எனக் கேட்டார். ஆம் சுவாமி திருடவில்லை மாற்றுவதற்கு கோவணங்கள் இங்கு நிறைய இருக்கின்றது நான் ஒரு வினாடியில் எடுத்து வருகின்றேன் என்று கூறி உள்ளே சென்று விதவிதமான கோவணங்களை எடுத்து வந்து கொடுக்கின்றார். எத்தனை விதமானாலும் என் கோவணத்திற்கு அது ஈடாகாது என்று சுவாமி கூறினார்.

ஏன் சுவாமி அவ்வளவு உயர்ந்ததா? என்று நாயனார் கேட்டார். அவ்வாறாயின் என்னுடைய கோவணத்துக்கு சமமான ஒரு பொருளை கொடுத்துவிடு என்றார் சுவாமி. துலாகபரம் எடுத்து வரச்சொல்லி துலாபாரத்தில் தனது ஈரக் கோவணத்தை வைத்து விட்டு இதற்கு சமமானதை கொடு நான் பெற்றுக் கொள்கின்றேன் என்றார். உடனே நாயனார் சென்று எடுத்து வந்து தன்னிடமுள்ள அத்தனை கோவணங்களையும் வைத்தார் கோவணம் தீர்ந்துவிட்டது. ஆனால் துலாபாரம் உயரவில்லை. தன்னிடமுள்ள பொன், பொருள், வைரம்என எல்லா சொத்தையும் வைத்தார் எதுவும் சமமாகவில்லை. தன்னுடைய மனைவி, பிள்ளைகளை வைக்கின்றார் சமமாகவில்லை.

ஒரு வினாடி கண்ணை மூடி சிவனே தியானித்து பெருமானே என்னுடைய மனதில் ஆணவம் நிறைய வேரூன்றி விட்டது என்னால் தந்துவிட முடியும் என்கின்ற ஆணவ எண்ணத்தின் பலனை நான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். தவறாக பேசிவிட்டேன் என்பதை உணர்ந்து விட்டேன். என்னை காத்தருள வேண்டும் என்று எம்பெருமானிடம் சரணாகதி ஆக நின்று தராசில் உள்ள மனைவி, பிள்ளை, பொருட்கள் எல்லாவற்றையும் இறக்கிவிட்டு தராசின் முன் வந்து நின்று எம்பெருமானுக்கும் அடியாருக்கும் நான் உள்ளன்போடு உணவிட்டது உண்மையானால் அடியார்களுக்கு நான் மனம் வருந்தாது தொண்டு செய்தது உண்மையானால் அடியார்களுக்கு எல்லாம் சென்று சேர வேண்டும் என்கின்ற எண்ணத்தோடு நான் சிவத்தொண்டு செய்தது உண்மையானால் என் சிவத்தொண்டுக்கு சமமாகட்டும் என்று சொல்லி அந்த தராசில் ஏறியவுடன் தராசு சமமாகிவிட்டது.

**"இழைத்த வன்பினி லிறைதிரு நீற்றுமெய் யடிமை**
**பிழைத்தி லோமெனிற் பெருந்துலை நேர்நிற்க!" வென்று**
**மழைத்த டம்பொழிற் றிருநல்லூ ரிறைவரை வணங்கித்**
**தழைத்த வஞ்செழுத் தோதினா: ரேறினார் தட்டில்"**
**(திருத்தொண்:பா:544)**

சுவாமி இதோ பாருங்கள் தராசு சமமாகிவிட்டது என்று கூறி திரும்பு கையில் அங்கே வந்திருந்த அடியாரை காணவில்லை என்ன பார்க்கும்போது எம்பெருமான் வானவீதியில் அம்பிகையோடு காட்சி கொடுத்து நீதி உன்னிடத்தில் அமர்ந்தது என்பதை இவ்வுலகு உணரட்டும் இவ்வுலகம் உள்ளவரை உன் புகழ் நிலைத்திருக்கட்டும் என அருள் வாக்களித்தார். இவ்வாறு பல அற்புதங்களைச் செய்து இறையடி சேர்ந்தார்.

இன்றைய சமூகத்திற்கு கேலிப்பொருளான கோவணம் இறைவனுக்கு விருப்பமானது என்பதை **"சிவன் விரும்பிய கோவணம்"** என்கின்றார் சேக்கிழார். கலைகள் என்பதை நூலாக்கி வேதம் என்பதை ஆடையாகக் கொண்டு கோவண வடிவில் உடுத்த எம்பெருமானை வழிபட வேண்டிய பத்தியானது ஆணவமில்லாது இருக்க வேண்டும் என்பதை இவ்வுலகிற்கு எடுத்துக் காட்டி இறைவனுக்கு கருவியாக விளங்கியவர் அமர்நீதி நாயனார்.

**திருச்சிற்றம்பலம்**

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு சொக்கநாயகி உடனுறை சிவலோகநாதர் - திருப்புன்கூர்

## தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 20ஆவது திருக்கோயில் திருப்புன்கூர்



**"சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும் பொழில் திருப்புன்கூருளானே"**

எந்நாட்டவர்க்கும் இறைவன், எம்பெருமான் என்பதை உணர்த்தும் பொருட்டு, கீழ் சாதியினர் என குறிப்பிடப்பட்ட திருநாளைப்போவார் நாயனாருக்கு (நந்தனார்), நந்தியை விலக்கி திருவருட் காட்சி வழங்கிய, அருள்மிகு சொக்கநாயகி உடனுறை சிவலோகநாதர் பெருமான் உறையும் அற்புதத் தலமே திருப்புன்கூர் திருத்தலமாகும்.

**அமைவிடம்: நாகப்பட்டினம், தமிழ்நாடு.**

வைத்தீசுவரன் கோயிலில் இருந்து திருப்பனந்தாள் செல்லும் சாலையில் மேற்கே 3 கி.மி. சென்றால் ஒருபுறம் திருப்புன் கூர் கைகாட்டியும், மறுபுறம் திருப்புன்கூர் சிவலோக நாதசுவாமி கோயில் என்ற வளைவும் உள்ளது. அதனுள் - அச்சாலையில் 1.5 கி.மீ. சென்றால் கோயிலை அடையலாம். சாலை ஓரத்திலேயே கோயில் உள்ளது. கோயில் வரை வாகனங்கள் செல்லும்.

**இறைவர் திருப்பெயர்:** சிவலோகமுடைய நாயனார், சிவ லோகநாதர்.
**இறைவியார் திருப்பெயர்:** சொக்கநாயகி, சௌந்தர நாயகி.
**கோயில் மரம்:** புங்க மரம்.
**தீர்த்தம்:** கணபதி தீர்த்தம் (நந்தனார் வெட்டியது), தேவேந்திர தீர்த்தம், அக்கினி தீர்த்தம், இடப தீர்த்தம்.
**வழிபட்டோர்:** சம்பந்தர், அப்பர், சுந்தரர், ஏயர்கோன் கலிக் காமர், கபிலதேவ நாயனார், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார், பிரமன், இந்திரன், அகத் தியர், சந்திரன், சூரியன், அக்கினி, பதஞ்சலி, வியாக்ரபாதர், சப்தகன்னியர், இராசேந்திர சோழன் முதலியோர். பாமாலை: சம்பந்தர், அப்பர், சுந்தரர்.

**திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்**

**திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்**

முந்தி நின்ற வினைக ளவைபோகச்
சிந்தி நெஞ்சே சிவனார் திருப்புன்கூர்
அந்த மில்லா வடிக ளவர்போலும்
கந்த மல்கு கமழ்புன் சடையாரே. (01-27)

**திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகம்**


பிறவாதே தோன்றிய பெம்மான் தன்னைப்
பேணாதார் அவர்தம்மைப் பேணா தானைத்
துறவாதே கட்டறுத்த சோதி யானைத்
தூநெறிக்குந் தூநெறியாய் நின்றான் தன்னைத்
திறமாய எத்திசையுந் தானே யாகித்
திருப்புன்கூர் மேவிய சிவலோ கனை
நிறமா மொளியானை நீடு ரானை
நீதனேன் என்னேநான் நினையா வாறே. (06-11)

**சுந்தரர் அருளிய திருப்பதிகம்**

அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வி னாய்க்குன்றன் வன்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்தமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்கும்
சிந்தை யால்வந்துன் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே (07-55)

**திருத்தலச் சிறப்பு**

திருப்புன்கூர் திருத்தலம், அனைத்து உயிர்களையும் சமமாகக் கருதி அருள் புரியும் இறைவனின் பேரன்பினை எடுத்துக்காட்டும் அற்புதமான தலமாகும். திருநாளைப்

போவார் நாயனார் எனப்படும் நந்தனாருக்காக, இறைவன் தனது முன் அமர்ந்திருந்த நந்தியை விலக்கச் செய்த மகோன்னதத் தலம் இதுவே.

முற்றுமுணர்ந்த பரம்பொருள், ஒரு பத்தரின் உளநிலையில் உள்ள தேடலை உணர்ந்து, அவருக்கு திருவருட்காட்சி தந்த வரலாறு இத்தலத்தில் நிகழ்ந்துள்ளது. மற்ற எந்த சிவன் கோயிலிலும் நந்தியின் நாக்கு வெளியே தெரியும். ஆனால் இங்கே நந்தனாருக்காக விலகிய நந்தியின் நாக்கு தெரியாத தனிச்சிறப்பும் உள்ளது. மேலும் இங்கு உள்ள நந்தி ஒரே கல்லில் அழகாக செதுக்கப்பட்டு, கலையழகோடு காட்சி தருகிறார்.

இத்தலத்திலுள்ள நந்தனாரின் திருவுருவம், உள்சுற்றில் இடப்புறமாக வைக்கப்பட்டுள்ளது. அத்துடன், இங்கு உள்ள அம்மையப்பமுருகர் (சோமாசுகந்தர்) திருமேனி மிகப் பெரியதாகவும், அழகாகவும் காணப்படுவது இத்தலத்தின் மேலும் ஒரு சிறப்பாகும். இங்கு உள்ள நடராசர் சபை, மிகுந்த கலையழகு கொண்டது. நடனத்தில் ஈடுபட்ட சிவபெருமானின் அருகில், தேவர் ஒருவர் நான்கு கரங்களால் ஐம்முக வாத்தியம் இசைப்பது போன்ற அமைப்பு காணப்படுகிறது. இது, இசை, நடனம், இறைநட்பு ஆகியவை ஒன்றோடொன்று இழைபனிக்கின்றன என்பதை உணர்த்துகிறது.

இக்கோயிலின் கல்வெட்டுகள், இறைவனுக்கு திருவிழாக்கள் மற்றும் பூசைகளுக்காக நிலங்கள் வழங்கப்பட்டதையும், இறைவனை "சிவலோகமுடைய நாயனார்" என அழைத்ததையும் கூறுகின்றன.

## திருத்தல வரலாறு

ஆதனூரைச் சேர்ந்த திருநாளைப் போவார் நாயனார் (நந்தனார்) கீழ் குலத்தில் பிறந்தவராதலால் கோயிலிற்குள் செல்வதற்கு அனுமதி இல்லாததால் வெளியில் இருந்தே வழிபடுவார். அப்போது இறைவன் முன் இருக்கும் நந்தி நன்றாக அவர் இறைவனைப் பார்க்க முடியாமல் மறைக்கும். அதற்காக கவலைப்பட்டு ஆதங்கப்பட்ட அவருக்கு, காட்சி கொடுக்க நந்தியை விலகச் சொல்லி நந்தனாரின் பத்தியை உலகிற்கு எடுத்துக் காட்டிய தலம்.

**சுந்தரர் பதிகம் மற்றும் மழை சம்பவம் :** சுந்தரர் மற்றும் அவரது நண்பர் ஏயர்கோன் கலிக்காம நாயனார் திருப்புன்கூருக்கு வந்தபோது, அந்தப் பகுதி நீண்ட நாட்களாக மழையின்றி வறண்டிருந்தது. மக்களின் அவலத்தை உணர்ந்த சுந்தரர், மன்னரிடம் **"12 வேலி நிலம் கோயிலிற்கு வழங்கினால் மழை பெய்யும்"** என கூறினார். மன்னர் உடனே ஒப்புதல் அளித்தார், அதன் பிறகு சுந்தரர்,

**வையகம் முற்றும் மாமழை மறந்து**
**வயலில் நீரிலை மாநிலம் தருவோம்**
**உய்யக் கொள்க மற்றெங்களை என்ன**
**ஒளிகொள் வெண்முகில் ஆய்ப்பரந் தெங்கும்**
**பெய்யும் மாமழைப் பெருவெள்ளம் தவிர்த்துப்**
**பெயர்த்தும் பன்னிரு வேலி கொண்டருளும்**
**செய்கை கண்டும் நின் திருவடி அடைந்தேன்**
**செழும்பொழில் திருப்புன்கூருளானே**
**- (திருப்பதிகம், பாடல் 2)**

என்ற திருப்பதிகத்தினை ஆழ்ந்த பத்தியுடன் பாடி மழை பெய்யவும், பிறகு 12 வேலி நிலம் கோயிலுக்கு வழங்கவும் சாத்தியமானது.

திரிபுர அசுரர்கள் மற்றும் நடராசர் சபை: இத்தலத்தில், சிவபெருமான் திரிபுரத்தை அழித்தபோது, அந்த அசுரர்களில் ஒருவரை தனது திருக்கோயிலின் வாயிலில் காவலராக நியமித்து, மற்றொருவரை ஐம்முக வாத்தியங்களை இசைக்க அழைத்தார் என்று சுந்தரர் தனது பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

**"மூவெயில் செற்ற ஞான்றுய்ந்த மூவரில்**
**இருவர் நின் திருக்கோயிலின் வாய்தல்**
**காவலாளரென்று ஏவிய பின்னை**
**ஒருவன் நீகரி காடரங்காக**
**மானை நோக்கியோர் மாநடம் மகிழ**
**மணிமுழா முழக்கவருள் செய்த**
**தேவ தேவ நின் திருவடி அடைந்தேன்**
**செழும்பொழில் திருப்புன்கூருளானே"**
**- (திருப்பதிகம், பாடல் 8)**

## திருக்கோயில் அமைப்பு

திருப்புன்கூர் கோயில் மூவர் பாடல் பெற்ற தலங்களில் ஒன்றாகும். ஐந்தடி உயரமான இராசகோபுரம், இரு வீதிகள், விசாலமான முற்றவெளி ஆகியவை இக்கோயிலின் அமைப்புச் சிறப்பாகும். வெளிவீதியில் விநாயகர், முருகன், பிரம்மலிங்கம், தலமரம் ஆகியவை உள்ளன. நந்தி சிலை வழிவிட்டு சற்று விலகியிருந்துதான் உள்ளது.

உள்பிராகாரத்தில் சூரியன், நால்வர், கலிக்காம நாயனார், சுந்தரவிநாயகர், சோமாசுகந்தர் (பெரிய திருமேனி), ஆறுமுகர், ஒன்பான்கோள்கள் (நவக்கிரகம்), பைரவர், சந்திரன், திருமகள் முதலிய சன்னதிகள் உள்ளன. சிவலிங்கம் சுயம்பு மூர்த்தியாக மண் புற்றாக காணப்படுகிறான். இதன் மீது குவளை சேர்க்கப்பட்டு தினசரி திருமஞ்சனம் நடைபெறுகிறது. சுவாமியின் கருவறை சுற்றில் நடன விநாயகர், பிட்சாடனர், அகத்தியர், இலிங்கோத்பவர், மலைமகள் (துர்க்கை), மாதொருபாகனார் உள்ளிட்ட தெய்வங்கள் உள்ளனர். சுவாமி சந்நிதியின் இடப்புறத்தில் சொக்கநாயகி அம்மனின் தனிச் சந்நிதி சுற்று வீதியுடன் அமைந்துள்ளது. நடராச சபையில் உள்ள நடராசர் மிகச் சிறப்பாக, பாதத்தில் அமர்ந்த தேவர் ஒருவர் ஐம்முக வாத்தியம் வாசிக்கின்ற காட்சி தருகிறார்.

மேலும், கோயிலுக்கு அருகில் நந்தனாருக்காக விநாயகர் ஒரே இரவில் வெட்டிய இடப தீர்த்தம் என்ற குளமும், ஏயர்கோனின் அவதாரத் தலமாகிய பெருமங்கலம் கிராமமும் அமைந்துள்ளன.

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**தகவல் - சைவசமயக் கலைக்களஞ்சியம் நூற்றொகுப்பு**

# திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தின் பேருரை ஆசிரியர்

# சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் உரை நயம்

**(சென்ற இதழ்த் தொடர்ச்சி)**

**திருமலைச்சிறப்பு பாடல் 15**

**அத்தர் தந்த அருட்பாற் கடலுண்டு**
**சித்த மார்ந்து தெவிட்டி வளர்ந்தவன்**
**பத்த ராய முனிவர்பல் லாயிரர்**
**சுத்த யோகிகள் சூழ விருந்துழி**

**பொருள் :** அத்தர் (சிவபெருமான்) அருளினால் கொடுத்த திருப்பாற் கடலைப் பருகி, மனம் நிறைவுபெற்றுத் தேக்கி அஃதே உருவமாய் வளர்ந்தவர். பத்தர்களாக உள்ள முனி வர்கள் பல ஆயிரவர்கள், சுத்த அவத்தையில் சிவத்தைச் சார்ந்த யோகிகள் என்ற இவர்கள் தம்மைச சூழ்ந்து கொண்டிருக்க உபமன்னிய முனிவர் அமர்ந்திருந்தபோது,

**வி-உரை:** அத்தர் தந்த அருட்பாற்கடலுண்டு சித்த மார்ந்து தெவிட்டி

**வளர்ந்தவன் -** உபமன்னிய முனிவர் குழந்தைப் பருவத்திலே பரல் வேண்டியழுக, இறைவர் திருப்பாற்கடலையே அக்குழந்தைக்கு உண்ணக் கொடுத்தருளினார் என்பது வரலாறு. "பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்" என்பது திருப்பல்லாண்டு.



பவானி சிவ
அ.வேலுச்சாமி

அருட்பாற்கடல் - அருளினாலே அத்தர் தந்த பாற்கடல், அத்தர் தந்தை யாவர்க்கும் தந்தையாகிய சிவபெருமானைக் குறித்தது.

**முனிவர் - மனனசீலர்**

பத்தராய முனிவர் - முனிவர்களாகிய அத்தன்மையோடு இறைவனிடத்தே பதிந்த பக்தியையும் வாய்ந்தவர். முனி வர்களாகியும் பத்தியில் வராத தாருகாவனத்து முனிவர் போன்றோரை வேறு பிரித்தற் பொருட்டுப் பத்தராய என்றார்.

**சுத்தயோகிகள் - சுத்த அவத்தையிலே நின்ற யோகிகள்.**

சூழ இருத்தலின் இயல்பை **"அம்மலங் கழீஇஅன்பரோடு மரீஇ"** என்னும் சிவஞானபோதம் பன்னிரண்டாம் சூத்திரத் துக் காணலாம். மத்தராகிய அணைந்தோர் தன்மைகளில் அன்பருடன் கூடியிருப்பதும் . ஒன்றாதலால் இவ்வாறு எடுத்துக் கூறினார். "ஒருப்படு சிந்தையினர்கள் உடனுறை வின் பயன்பெற்றார்" என்பது முதலாக அன்பர் கூட்டத்தின் இயல்புகளைப் பல இடங்களில் காணலாம் என்று சிவக்கவி மணி ஐயா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.



**சிவக்கவிமணி**
**சி.கே சுப்பிரமணிய முதலியார்**

**பாடல் 16**

**அங்க ணோரொளி யாயிர ஞாயிறு**
**பொங்கு பேரொளி போன்றுமுன் றோன்றிடத்**
**துங்க மாதவர் சூழ்ந்திருந் தாரெலாம்**
**"இங்கி தென்கொ லதிசயம்"? என்றலும்**

**பொருள்:** அவ்விடத்தே ஒரு பெரிய ஒளியானது ஆயிரம் சூரியர்கள் ஒருங்கே தோன்றி வளரும் பெரிய ஒளிபோல் முன்னால் தோன்றவே, தூய தவமுனிவர்கள் சூழ இருந்தார்கள் எல்லாரும இங்கே இது தோன்றுவது என்ன அதிசயம் என்று வினாவுதலும்,

**வி-உரை:** அங்கண் ஓர் ஒளி ஆயிர ஞாயிறு பொங்கு பேரொளி போன்று முன் தோன்றிட,

அவர்கள் முன்பாக ஒரு பெரிய, ஒளி தோன்றிற்று அஃது ஆயிர ஞாயிறுகள் சேர்ந்து மேல்மேல் வளர்ந்து பெருகிய ஒளிபோன்றிருந்தது.

**அதிசயம்:** இன்னதென்று தெரிந்து அனுபவிக்கப் பெறும் பெருமித உணர்ச்சியை அதிசயம் என்பர். பெருமித உணர்ச்சி

மட்டும் உண்டாகி இன்னதென்று அறியப்படாதது அற்புதம் என்க என்று சிவக்கவிமணி ஐயா அவர்கள் விளக்கியுள்ளார்கள் **"அதிசயம் கண்டாமே"** என்றும் **"அற்புதம் அறியேனே"** என்றும் மணிவாசகப் பெருமான் திருவாசகத்தில் கூறியுள்ளார்கள்,

ஞான ஒளியுடன் விளங்கும் யோகிகள், முனிவர்களிடையே அவர்கள் மனங்கவரும் சத்தியுடன் மற்றும் ஒரு பேரொளி தோன்றிற்று ஆதலின் இஃது அதிசயமாயிற்று. தட்சிண கயிலாயமாகிய திருக்காளத்தி மலையிலும் **"ஐந்துமாறடக்கி யுள்ளார் அரும்பெரும் 'சோதியாலும், எந்தையார் திருக் காளத்தி மலையினில் இரவொன்றில்லை"** என்று சேக்கிழார் பெருமான் கூறுவதும் சிந்திக்கத்தக்கது.

இறைவனே உலகத்திற்கு விளக்கத்தைச் செய்து காட்டும் கருத்தனாதலின் பேர் ஒளி எனப் பெறுவன்.

**"ஆயிரம் ஞாயிறு பொங்கு பேரொளி'** என்பது சிவபெருமா-னது பேரொளியாகிய சிவவொளி **"ஆயிர ஞாயிறு போலும் ஆயிர நீண்முடியானும்"** என்பது அப்பர்சுவாமிகள் தேவாரம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவபெருமானது பேரொளியைப் பெற்றவர் என்பது இங்குக் குறிக்கப்பெற்றது. சிவபெருமான் ஒரு காலத்தில் தமது திருவுருவைக் கண்ணாடியில் பார்த்து அதில் தோன்றிய உருவத்தை **"வா"** (என்று அழைக்க அஃ தே சுந்தரராக வந்தது என்பது வரலாறு.

**"கயிலை நாயகன் காமரு தன்னுருப்**
**பயிலும் ஆடியிற் பார்த்தங் கழைத்தலும்**
**வெயில்செய் வெங்கதிர் கோடி விராய் எனச்**
**செயிரி லாமெய்த் தேசொடும் தோன்றினார்**

என்பது பேரூர்ப்புராணம் பள்ளுப்படலம். இப்பாடலில் **"வெங்கதிர் கோடி"** எனவும், **"மெய்த் தேசு"** எனவும் குறித்தல் காணலாம்.

**திருமலைச்சிறப்பு பாடல் 17**

**அந்தி வான்மதி சூடிய அண்ணல்தாள்**
**சிந்தி யாஉணர்ந்து அம்முனி தென்திசை**
**வந்த நாவலர் கோன்புகழ் வன்தொண்டன்**
**எந்தை யார்அரு ளால்அணை வான்என**

**பொருள்:** மாலையில் வானில் தோன்றும் பிறைச்சந்திர னைச் சிரத்திலே சூடிய பெருமானின் திருவடிகளைத் தியா னித்து உண்மை உணர்ந்தவராய் அந்த உபமன்னிய முனிவர், தென்திசையில் வந்து அவதரித்த நாவலூர் நம்பிகளாகிய புகழ்ச்சிமிக்க வன்தொண்டர், எம்பெருமானுடைய திரு வருளினாலே மீண்டும் கயிலைக்கு எழுந்தருள்கின்றார் என்று சொல்லி.

**வி-உரை:** தென்திசையில் நம்பிகள் வந்தது திருவருள் ஆணை வழியேயாம் இப்போது வெள்ளை யானையின்மீது மீண்டும் கயிலைக்கு எழுந்தருளுவதும் அவரது ஆணை வழியே யாம். இதனைத் **"தானெனை முன் படைத்தான்"** எனும் திருநொடித்தான்மலைப் பதிகத்தால் அறிகின்றோம்.

**அண்ணல் - பெருமையுடையவன்**

**தாள் சிந்தியா உணர்ந்து -** தாள்களைச் சிந்தித்து அந்தச் சிந்தனையின் துணையால் உணர்ந்து என்க. உபமன்னிய முனிவர் இறைவனிடத்தில் அந்தப் பேரொளியாக வானத் தில் வருவது யார் என்று இறைவனிடத்தில் விண்ணப்பம் வைக்க, பெருமான் நம்முடைய சுந்தரன் (ஊரன்)என்று முனிவரிடத்திலே உணர்த்தியதாக நம்பிகளே தனது பதிகத்தில் பாடியுள்ளார். **"மந்திர மாமுனிவர் இவனாரென நம் பெருமான் நந்தமர் ஊரன் என்றான் நொடித்தான்மலை உத்தமனே"** பாடல்-9

உபமன்னிய முனிவருக்கும் பெருமானுக்கும் இடையே நடந்ததை நம்பிகள் தன்னுடைய மனத்தால் உணர்ந்து பதி கத்தில் பதிவு செய்கிறார். பெரியபுராணத்தில் ஆரம்பமும் இறுதியாகவும் வைத்துப் போற்றக்கூடியது இந்த இடமே. இவ்வரலாற்றை நம்பிகள் கயிலை வரும் வழியில் உணர்ந்து பாடியருளிய அற்புதமும் காண்க என்று சிவக்கவிமணிஐயா அவர்கள் உரையில் விளக்கியுள்ளார்கள்.

**சிந்தியா உணர்ந்து -** சிவன் தன்னையே உணர்ந்து உள்ள முனிவராயினும் இது தெரியும்படித் தனித்துச் சிந் தித்து உணர்ந்தார் என்பது தோன்றிய சோதியின் வரலாறு தெரிய வேண்டியிருந்தது. அவ்வாறு தெரிவதனை ஏனைய மாதவர்களுக்கும் சொல்லவும் வேண்டியிருந்தது. அருட் சோதியாய்க்கயிலையில் தோன்றிய அது புலன் அறிவாலும் கலையறிவாலும் உணரலாகாதது. ஏனெனில் இவ்வறிவுகள் கட்டுப்பட்ட தன்மையுடையன. கட்டுப்படாத எல்லையில் லாத அறிவினால் உணரவேண்டியவன் இறைவன் அவனோடு கலந்த அடியார்களும் அவ்வாறே உள்ளவர்கள். ஆதலின் பதிஞான சிற்சக்தி உபகாரத்தால் உணரவேண்டுதலின் அண்ணல் தாள் சிந்தியா உணர்ந்து என்றார் என்று சிவக் கவிமணி ஐயா அவர்கள் உரையில் குறிப்பிட்டுள்ளார்கள்.

முனிவர் பேரரொளியை உணர்ந்தது பதிஞான சிற்சத்தி யால் என்று அறியலாம் **'பதிஞான சிற்சக்தி'** என்பது இறைவ னுடைய திருவருள் சத்தியே.

வன்தொண்டன் நம்பிகளது பெயர்கள் பலவற்றுள்ளும் இப்பெயரே மிகச்சிறந்தது. **"மற்று நீ வன்மை பேசி வன் தொண்டன் என்னும் நாமம் பெற்றனை"** என்று இறைவனே கூறியது. **"மற்றிதற்குப் பதிகம் வன்தொண்டர்தாம், புற்றிடத்து எம் புராணர் அருளினால், சொற்ற மெய்த்திருத்தொண்டத் தொகை"** என்பதைக் காணலாம். தொண்டு இருவகைப்படும் அவை வன்தொண்டு, மென்தொண்டு என்பது. சாத்திர விதிகளுக்குட்பட்டு அவற்றோடு இணங்கிச் செய்வதாம், சாத் திர அதீதமாய்ச் செய்வது வன்தொண்டாம் இது செய்பவர்கள் தற்போதம் சிறிதுமின்றிப் பதிகரணம் அடைந்தவர்கள்.

**(தொடரும்)**

**திருச்சிற்றம்பலம்**

**ஆக்கம் : பவானி சிவ அ. வேலுச்சாமி**
**நன்றிகள் - சமயத்தமிழ் திங்கள் இதழ்**




தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**Siva P.Ketharan**

English Editor – Thennadu

Thennadu Tamil Atheenam (Madam) – Australia

+61 49949 3300, ketharan@thennadu.org




# TAMIL TEMPLES: OUR MARVELLOUS CREATIONS

Tamil temple architecture is a remarkable testament to ancient Tamil civilisations' engineering prowess and spiritual fervor. Rooted in the Sangam period, these temples were primarily constructed by the Chola and Pandya dynasties and evolved over centuries, with successive rulers enhancing their grandeur. Beyond serving as places of worship, these temples functioned as cultural and social hubs, reflecting the holistic role they played in society.

A defining feature of Tamil temples is the gopuram, the towering entrance gateway adorned with intricate sculptures and vibrant stucco work depicting deities and scenes from Saiva stories. These structures not only serve as entrances but also symbolise the threshold between the mundane and the divine. At the heart of the temple lies the vimana, a pyramidal tower situated above the sanctum sanctorum. Often intricately carved, the vimana signifies the sacredness of the inner sanctum and is a hallmark of Tamil temple architecture. The mandapam, or pillared hall, serves multiple purposes, from hosting religious ceremonies and cultural performances to functioning as a space for community gatherings. These halls are architectural masterpieces, showcasing Tamil culture's skill in stone carving and structural design.

One such example is located in the ancient city of Madurai, the Meenadchi Amman Temple is a paragon of Tamil temple architecture. Originally built by the Pandya dynasty, the temple complex spans 14 acres and houses 14 gopurams, each adorned with a profusion of sculptures. A standout feature is the Aayiram Kaal Mandapam or the Thousand Pillar Hall. The hall also houses a museum, offering insights into the temple's rich history and the region's cultural heritage.

The Ramanathaswamy Temple is one of the twelve Jyotirlinga temples dedicated to Lord Siva. Initiated by the Pandya kings in the 12th century, the temple is renowned for its longest corridor among all Saiva temples, stretching over 1,200 meters and supported by more than 1,000 intricately carved pillars. This architectural marvel not only exemplifies Tamil civilisation's prowess but also serves as a spiritual pathway for devotees.


Tamil temple architecture is a harmonious blend of spirituality, art, and engineering. These temples are not merely structures of worship but are chronicles etched in stone, reflecting the socio-cultural and religious ethos of their times. Their enduring legacy continues to inspire awe and reverence, standing as monumental testaments to human devotion and creativity.

# Saiva Saint Amarneethi Nayanar The one who surrendered



Srisankarshan Srisatkunarajah
English Editor
Thennadu

In the vast constellation of the 63 Nayanmars, each star glows with a unique intensity of love for Siva peruman. If Viranminda Nayanar and alike were fires of uncompromising loyalty to the devotees, Amarneethi Nayanar, the 6th in order, was a quiet flame that burned with the selfless glow of service, surrender, and absolute faith. His is not the tale of grand miracles or ferocious penance — but of a heart that realised and knew no limits in its devotion.



## Background

Amarneethi was born in the sacred city of Pazhayarai, now incredibly popular and once a spiritual hub under the Chola dynasty. As a wealthy merchant, he had all that one could wish for. Gold, grain, garments, a good name and a sense of faith. But to him, these were not possessions, they were offerings, tools with which he worshipped Peruman through his devotees. Among the many acts he performed in his charitable life, his most cherished was offering kondrai garments (simple loincloths), made from soft cloth, used by ascetics and sivanadiyarhal.

His donations weren't the kind that were made to appeal to society for personal schemes. He gave like a child offering his mother a flower, with much innocence, humility, and deep love matured into devotion. Every cloth he handed out was accompanied by a bowed head, reverent demeanor and a prayer. And the sivanadiyarhal, in turn, blessed him, keeping his household soaked in divine grace, cementing his name amongst the clan.

## The Test

What is devotion that remains unshaken and only in comfort? How would the devotee gain immortality in our ethos without an arena to perform such tremendous charity? The Lord, true to his nature, orchestrated a brilliant test.

One day, Peruman descended, not in a divine chariot, but in the humble form of a young sivanadiyar, an ascetic. Body was lean, eyes radiant with spiritual fire, and voice soft but sure. He approached Amarneethi nayanar and asked for a replacement for one of his worn loincloths. The merchant, ever ready, offered him a fresh kondrai cloth. The ascetic then said, "Keep my old one safe until I return, it is dear to me." Amarneethi bowed and agreed, then locked it up for safekeeping as the ascetic left for the river. Upon his return, the divine arrangement began to unfold.

He asked for his old cloth back, and Amarneethi couldn't locate the original one in the box and offered a fresh one. The sivanadiyar responded, "These clothes could not be the same — mine had value. You robber, you have wronged me." Amarneethi, shaken, swore by his devotion that he will endeavor to compensate. The ascetic leveled, "Then let us weigh and see."

A weighing scale was brought. The old, tattered cloth which the ascetic was wearing throughout was placed on one side. Amarneethi placed a fresh cloth on the other side. But to his astonishment, it did not balance. He added ten more. Still no balance. He added gold, silver, rice bags, silks, ornaments, his merchant ledger, his chariots. Nothing could match the weight of that old divine cloth, for it is but the lord's decree after all!

Realising that this was no ordinary ascetic, Amarneethi did what only a true bhakta would dare to do. He consulted with and brought his wife and child to seat them on top of his riches, shortly afterwards joining them. Still, the balance did not tip.

And then, the realised Nayanar chanted the Ainthu Eluthu Manthiram (the five syllabled verse). The scale was balanced.

At that moment, the heavens opened. The ascetic stood revealed in his radiant, blue-throated form, and blessed the family with his sight. As scale vanished and the family stood bathed in divine light. Peruman declared, "O Amarneethi! You have offered not just your wealth but your very self. You have understood the true weight of devotion. You shall attain my abode."

## Significance through time

Thus did the merchant of Pazhayarai become Amarneethi Nayanar, 'one who traded not in silks or spices, but in selfless surrender'. His name lives on, not because he gave much, but because he gave everything, without hesitation, without calculation.

His story reminds us that even the simplest offering,  a loincloth, a smile, a word of kindness, when offered with love, can outweigh the riches of kings. And that sometimes, the Lord comes not to receive, but to reveal, the weight of our devotion, the truth of our heart.

In our times, where every act is measured by gain, and devotion is often filtered through ritual without feeling, Amarneethi Nayanar calls us back. Back to the pure joy of giving, the silent strength of surrender, and the sacred weight of a true heart.

Saivites commemorate and remember the saint, and the values made apparent, on his Guru Poosai day- Aani-Puram, inculcating these values and preserving the tradition across generations. We will explore a humongous spectrum of devotional pedagogies through the Periyapuranam. In doing so, the next few issues of the article series would focus on stories of much more mortal passion and mundane valour, all part of the beauty of the lessons imparted to us by the Nayanars.

# Sydney Murugan Chariot Festival
















# TAMIL PHILOSOPHY - OUR WAY OF LIFE





Siva P.Ketharan
English Editor – Thennadu

As a culture of many millennia our way of thinking and moreover our way of life is represented by our philosophy. It is no surprise that a culture of over 5000 years would boast such a sophisticated and meaningful way of life. Tamil culture is not only rich in history but also in the wisdom embedded within its customs and practices. Every aspect of life, from language to daily rituals, is shaped by a deep philosophical understanding that has been passed down through generations. It's no surprise that such an ancient culture has developed a way of life where even the smallest custom holds significant meaning, reflecting a thoughtful and deliberate approach to life that has endured for millennia. Specifically, the Thirkkural and Thirumurai are both ancient texts that provide a wealth of knowledge on Tamil philosophy and spirituality. Especially in our modern world filled with stress and problems, taking a step back in time and reliving what our ancestors preached on how to live a peaceful life, will for sure improve our day-to-day lives.

Remarkably, our philosophy is embedded within our language itself with the uyir ezhuthu and mei ezhuthu, encapturing the basics of Tamil philosophy of how humans and all beings in this world have both a uyir (soul or life) and mei ( their physical form). The uyir symbolises the spiritual essence, while the mei represents the tangible, material existence. This duality mirrors the Tamil understanding of life, where the soul and body coexist, each with its own significance, reflecting the interconnectedness of the spiritual and physical realms. Similarly, just as how all life in our world is structured Tamil words also encompass the same philosophy. Life in our world balances both the soul and the body, likewise, Tamil words strive to do the same. The vowels (uyir) give breath and life to the sound, while the consonants (mei) provide the structure and form. This linguistic combination mirrors the interconnectedness of the spiritual and material realms in Tamil philosophy, where both aspects are essential to the creation and meaning of life, expression, and existence. It is truly amazing to be a part of a culture where the language itself is likened to life, and from this is it very evident as to why Tamil people praise our language as life itself.

Moving on, one of the foundational principles of Tamil philosophy and spirituality is the concept that our lives exist in a cycle of rebirth, one in which we are stuck until we prove to God that we are deserving of eternal bliss, through good deeds. Our existence is created out of 3 things Pathi (Sivan), Pasu (Us souls) and Pasam (Ego). Essentially, Pasam is what holds souls back from being able to achieve eternal bliss or escape this painful cycle of rebirth to be with Sivan. Pasam is the attachment that we individual souls have to the material world we live in driven by desires,




ignorance, and ego. We should not give attention to material wealth or objects we should rather prioritise other non-materialistic objects such as other souls and God himself. The ultimate goal in many Tamil philosophical teachings is to break this bond (Pasam) through devotion, knowledge, and spiritual practice, thereby liberating the soul and uniting it with the divine, Pathi. Ultimately learn yourself, and question who you are. Note you cannot do that by looking in the mirror as that is a representation of your worldly materialistic features, look beyond that into your soul and realise who you are. Only after that can you be able to figure out your true self, only then can you be able to do good in this world and ultimately diminish your ego and end your cycle of rebirths to unite with Sivan.

Karma is another major part of Tamil philosophy and is fundamental to all individual actions. Karma is the law of cause and effect, meaning that if one does an act of good they will experience positive outcomes and negative acts will have negative outcomes. This is an idea embedded with many Saiva texts such as Sivagnanabhodam and the Thirukkural. As the Kural (38) states:

**“வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்**

**வாழ்நாள் வழியடைக்கும் கல்”**

**“If one allows no day to pass without some good being done, his conduct will be a stone to block up the cycle of births and deaths.”**

This couplet outlines the concept of Karma clearly, and emphasises that if one does good they can expect good in return. Although this is true, another key aspect of Tamil philosophy is to not participate in good deeds just to experience positive outcomes in the future. The true spirit of karma lies in performing good deeds selflessly, for the benefit of society, rather than for personal gain, meaning individuals should not only commit good in this world for the sole reason of experiencing the same in the future. Hence, remember the laws of Karma whenever you make a decision in life no matter how big or small, and moreover be a good person to create a positive impact on society and not for your own benefit.

Moreover, in life, we all encounter instances of wrongdoing by others and may experience hurt in various ways, but how we choose to respond is what truly matters. Initially, you may choose to respond by fighting fire with fire and hurting another person as revenge, although this may seem like the most just option at the time, Tamil philosophy teaches that this is never the case. Instead, as strong and moral individuals, we should attempt to put our wrongdoers to shame by returning their misconduct with acts of kindness.

This is poetically emphasised in the Thirukkural with Kural 314:

**“இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண**

**நன்னயஞ் செய்து விடல்.”** "The best way to punish those who have done you harm is to put them to shame by returning good for their evil."

This approach not only helps in maintaining our own virtue but also acts as a method to reform a wrongdoer through the power of setting a positive example. Additionally, it advises us to forget both the harm done to us and the good we do in response, which ultimately enforces a state of mental cleanliness free from any grudges and pride.

# Miracles of Saiva Saint Thirugnanasampanthar Swamikal



Siva P.Abiram SG


Thirugnanasampanthar was a Saiva poet/saint, who lived in the seventh century CE.He is one of the most prominent saints amongst the 63 Nayanars. Sampathar's entire collection of hymns about Lord Sivan is called "Thirukkadaikappu''. These were later collected to form the first three volumes of the Thirumuraigal – one of the principle texts for Saiva Sithantham philosophy.

Sampanthar's relatives arranged for him to marry the daughter of Nampanthar Nambi from Nalloor Perumanam (Achapuram). On the wedding day, Sampanthar went to the temple at Seerkazhi to pray. Afterward, he, along with his father and relatives, made their way to Nalloor. They were given a warm welcome. Sampanthar entered the marriage hall, where Nampanthar and his family brought the bride and seated her next to him. Thiruneela Nakka Nayanar performed the wedding rites. Holding his bride's hand, Sampanthar stood and rushed toward the Siva temple, with the crowd following him. In front of the Sivalingam, he sang a hymn to unite him with Sivan

Instantly, Sampanthar heard Sivan's voice say, "Let you and everyone at your wedding merge into my light," the whole temple lit up brightly with Sivan's grace. At the centre of that glowing light was a Sivalingam, with a clear path leading to it.

Filled with joy and love, Sampanthar began singing a hymn starting with the words "Kaath-alaaki which goes as follows:

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.



kaatha laakik kasinthukan neermalki
oathu vaarthamai nannendrik kuyppathu
vaetham naankinum meypporu laavathu
naathan naamam namassi vaayavae.

**In english this translates to:**

With tender hearted love. With profuse tears rolling down his cheeks. He will direct those who recite the manthiram in the path to salvation. Namasivaya, which is the name of the master, Sivan.

The hymn had emphasized that the five lettered manthira (NA MA SI VA YA) could grant the grace of God.

Sampanthar invited his father and all the wedding guests to step into Sivan's light. Finally, holding his bride's hand, Sampanthar entered the light and merged with the Sivalingam. Then, the light, along with Sampanthar gently faded away.

# Tamil New Year




Tamil New Year is a very significant day, marking the start of the Tamil calendar year, and it begins at a propitious time. It is not just the start of a new year but also a spiritual and cultural renewal for Tamil people wherever they live.

The origins of the Tamil New Year dates to thousands of years and have a solid foundation in Tamil culture. It is known by the name of Puthandu and falls on the first day of the Tamil month Chithirai.Ancient Tamil literature, such as the Silappatikaram and Tholkappiyam, mentions this festival, which goes to show how deeply entrenched the tradition is. Even today, it remains a symbol of Tamil identity and pride, and it is celebrated with rituals to honour time, nature, and family.

One of the most important aspects and traditions of the Tamil New Year is visiting the temple. A chance to pray to our gods, express gratitude for the past year and say our hopes and blessings for the upcoming year. Tamil's have a chance to dress up in our traditional clothes, such as vetti, saree and pavadai, and to come together and see family and friends. The atmosphere is full of joy and celebration as people wish for a good future and engage in special pujas. Families gather and share delicious traditional food like vadai, aval and payasam. This food is not just a feast but also symbolic in nature, as each of the differing flavours represents experience in life, sweet, sour, bitter, and hot. Tamil New Year is also a time to rebuild connections with family and friends and rejoice with them, strengthening relationships within society. Furthermore, the temple also provides dinner for everyone, anathanam.



Nianthri Vijekumaran
Grade 9,
St Margaret's Grammar
Burwick

Tamil New Year is a holiday that encapsulates our Tamil history, religion, cuisine, and tradition. It is celebrated by Tamils from all over the world, in countries like Singapore, Malaysia, Sri Lanka, India and Australia. Reminding us of our rich and grand cultural traditions and allowing us to commence the new year full of optimism, joy, and prosperity.

# Third Doubt (Refuting Indria-Aanmavada)



**Last month Summary :**

Sivakan, an 8-year-old, and his friends were having a discussion, when a friend questioned whether the body itself could be the soul (Uyir), since when someone calls out a name like "Muruga", the person associated with that name responds. This led to an explanation that response alone does not prove the body is the soul—after death, the body no longer responds, clearly showing the absence of the soul. Furthermore, the use of phrases like "my body" suggests that the speaker recognises themselves as separate from their body, just as "my house" implies ownership, not identity. When the friend argued that pain felt in the body makes one say, "I feel like I'm dying," it was clarified that this refers only to the condition of being alive—not the subtle, conscious soul. The discussion concluded with the understanding that the body and the soul are two distinct entities, with the soul being an intelligent, unseen force that animates the body.

Another friend asked, "It's said that the soul, or atma, is an intelligent entity, and knowledge is its nature. If that's the case, then our sensory organs, like our ears, nose, eyes, tongue, etc., must have the ability to gain knowledge, right? So, can we consider these sensory organs as the soul or atma?"

"The sensory organs, like the ear, nose, and so on, don't actually know the respective sounds, smells, and so on. They're just instruments. There's something more subtle than these sensory organs with which knowledge occurs.

Additionally, each organ can only perceive a limited part of the world. For example, the eyes can only see colours and forms; they're meant to detect sight, not sound. The eyes can't perceive sound, taste, smell, or touch. Similarly, any specific sensory organ can't perceive the objects of the other four senses. Because of all these reasons, it can be concluded that the soul is separate from the sensory organs."

**Saiva Philosophy Reference:**

The takeaway of the story is that the soul (Atma) is not the same as the organs of perception. Though the soul's nature is intelligent and it gains knowledge, the ears, eyes, nose, tongue, and skin are merely instruments used by the soul to interact with the world. Each sense organ is limited in its function—eyes can only see, ears can only hear, and so on. None of them possess awareness on their own. The fact that knowledge arises through these organs, but not from them, proves that a subtler, conscious entity—the soul —is operating through them.

# தென்னாட்டு நிகழ்வுகள்




தென்னாட்டில் கயிலைமணி சிவமுருகு இளவேனில் ஐயா அவர்களால் சிறப்புத் திருமஞ்சன வழிபாடுகள் (05-05-2025)



உலக நிறைவு புத்தாண்டு வழிபாடுகள் (14-04-2025)




செங்கோல் ஆதீனம் குருமுதல்வர் தென்னாட்டில் வழிபாடு (12-04-2025)






அப்பர் சுவாமிகள் குருபூசை (23-04-2025)



# தென்னாட்டு நிகழ்வுகள்



பங்குனித் திங்கள் நிறைமதி வழிபாடும் தென்னாடு இதழ் வெளியீடும்  (12-04-2025)

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் ஐம்பத்து ஏழாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் “மதி நிறங்கள்” (மதி கலர்ஸ்) பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 மேழம் நல்லோரை சித்திரைத் திங்கள் 29ம் நாள் நிறைமதி அன்று (12-05-2025 திங்கட்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் – HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111 | மின்னஞ்சல் thennavan@thennadu.org

fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org